# முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | ௩—7—௫9 | வெள்ளி | ஒலி: 11

## அமைச்சர் அச்சுறுத்துகிறார்!

"திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போன்ற எந்தக் கட்சியாலும் நாட்டுப் பொறுப்பை ஏற்று நடத்த முடியாது! ஆகவே, காங்கிரஸ் கட்சியைத்தான் மக்கள் ஆதரிக்க வேண்டும்; இல்லாவிட்டால் இங்கும் 'கேரளா'வின் கதிதான் ஏற்படும்!" என்று மந்திரி மாணிக்கவேலர் ...

# பஞ்சம் கண்டு பதறுது வங்கம்; மஞ்சம் விட்டெழவில்லை தென்னகம்!

வங்கம் — எப்போதும், எதிலும் முன்னணியில் நிற்கும் நாடு. —குறிப்பாக உணர்ச்சி வசப்பட்ட செயல்கள் என்றால் அதன் நாடி நரம்புகளிலே புதியதோர் உற்சாகம் பிறக்கும். இதை அந்த நாட்டின் வரலாறு பேசுகிறது.

வெள்ளையனாம் கொள்ளையனை எதிர்த்து ஒரு சில இரத்தத் துடிப்புள்ள இளைஞர்கள் துப்பாக்கி நீட்டிப் புறப்பட்ட போதும், வங்கம் முன்னணியில்தான்!

நாடெங்கும் போராட்டங்கள் நடந்தபோது வங்கத்துச் செய்திகளையே மக்கள் வாங்கிப் படிக்கும்படி செய்த வீரம் மிகுந்த நாடு!

கைராட்டையும் தக்ளியும் நாட்டை மீட்குமோ என நினைத்து, நாடுவிட்டு நாடு கடந்து படை சேர்த்து வெள்ளையர் தடை கடக்கவந்த சுபாஷ் சந்திர போஸைத் தந்த நாடு.

இப்போதுகூட என்ன? இந்தி மொழியை எப்படியாவது திணித்துவிட வேண்டும் என்று எண்ணும் கள்ள மனதினருக்குக் கலக்கமூட்டும் நாடுகளில் தென்னகத்துடன் சில சமயங்களில் சேர்ந்து நிற்கும் நாடு, வங்க நாடு!

அந்த நாட்டின் ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு எழுச்சிக் காதையாக இருக்கும்! அந்த எழுச்சிக் காதைகளில் ஒரு 'படலமாக'த்தான் இப்போதைய 'உணவுப் பிரச்சினை' வந்திருக்கிறது.

உணவுப் பிரச்னையால் வங்கம் பட்ட பாடு உலகம் அறிந்த கதை! முன்னொரு தடவை உணவுத் தட்டுப்பாட்டால், பஞ்சத்தால் வங்கமெங்கும் பிணங்கள் விழுந்தன! விழிகள் நீரைச் சொரிய, விம்மி அழக் கூடச் சக்தியின்றி மக்கள் பட்டினியால் வாடி, மெலிந்து, மெல்ல மெல்ல உயிர் விட்டவர் ஏராளம்; ஏராளம்!

இரைப்பையும், குடலும் காலியாகி தசைச் சுவர்கள் ஒன்றையொன்று ஒட்டிக் கொள்ள, அதனால் வயிறு ஒட்டி, வாய்வரண்டு, கண்கள் செருகி, மூச்சு நின்று முச்சந்தியில் பிணமாக விழுந்தவர் ஆயிரம்; ஆயிரம்!

அந்த 'சாவுக் கதை' மனதில் பேருருவத்தில் ஆட வங்கத்து எதிர்க்கட்சிகள் 'எச்சரிக்கை' தந்தன, அரசாங்கத்திற்கு!

"பஞ்சம்! பஞ்சம்! முன்பொரு தடவை நம்மை வாட்டி வதைத்த பஞ்சம் வருகிறது! அந்தப் பயங்கரப் பஞ்சத்தின் காலடி ஓசை அதோ... கேட்கிறது! உற்றுக் கேளுங்கள்....(இன்றைய உணவுப் பிரச்சினையை உன்னிப்பாக ஆராய்ந்து பாருங்கள். இதே தட்டுப்பாடு வளர்ந்தால் என்ன ஆகும் எனச் சிந்தியுங்கள்!).... பஞ்சத்தின் காலடி ஓசையைக் கண்டிப்பாக கேட்பீர்கள்! உணவுப் பொருளைத் தேக்கி வைப்பவரைக் கண்டு பிடிப்பீர்; கடுமையான தண்டனை தருவீர்; ஏழையர் கண்ணீர் துடைப்பீர்." என்றன, எதிர்க்கட்சிகள்! அதிகார பீடத்திலிருப்போர் "இல்லையில்லை! இது பொய்!"—என்று பெருங்குரலெடுத்துக் கூவினர்.

ஆனால்... நாட்டிலுள்ள மக்கள் உணவுப் பொருட்கள் கிடைக்காது திண்டாடினர்; அரிசிவிலை, மீன் விலை எல்லாம் வாழைத் தண்டில் ஏறும் விஷம்போல் ஏறின! பதுக்கல்காரர்கள் கும்மாளம் கொட்டி ஆடினர்.

எதிர்க் கட்சிகள் சொன்னது உண்மை யென்று உணர்ந்தனர். அந்த உணர்வுதான் வங்கத்துக் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் கூட்டத்தில் வெளி வந்தது.

"எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னது உண்மை. ஆம், பஞ்சத்தின் காலடி ஓசையை நாங்கள் கேட்கிறோம். பதுக்கல்காரர்களின் பேராசையால் மக்கள் பட்டினி கிடக்கிறார்கள்.

"முதலமைச்சர் அவர்களே! இதற்குச் சரியான நடவடிக்கை எடுங்கள்!"

—என்று அவசரப்படுத்தியிருக்கின்றனர் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள்!

"இல்லையில்லை! பஞ்சத்தின் காலடி ஓசை இல்லை! பதுக்கல்காரர்களை அரசியல் சட்டத்தின்படி பயமுறுத்த முடியாது; சட்டம் அவர்களை நிர்ப்பந்திக்க முடியாது!"

—என்று 'சமாதானம்' கூறி கூட்டத்தில் சமாதானத்தை நிலவச் செய்ய நினைத்தார், வங்கத்தின் முதலமைச்சர்.

ஆனால் சமாதானம் நிலவவில்லை; சண்டமாருதம் கிளம்பியது! பொறுமை விளையவில்லை; புயல் வீசிற்று!

"பதுக்கல்காரர்கள் இருக்கும் வரை பஞ்சம்வராது இருக்குமா? பொருளாதாரப் புத்தகத்தைக் கொஞ்சம் புரட்டிப் பாருங்கள்! அல்லது நடைமுறை அறிவை வைத்து நன்கு எண்ணிப்பாருங்கள்! அரசியல் சட்டம் பதுக்கல்காரர்களிடம் நெருங்கவிடாதாம்! ஆனால்....மக்களை மட்டும் பஞ்சத் தீயில் வெந்துபோக அனுமதிக்குமோ? சட்டம் முதலாளிகள் வீட்டுக் கொட்டத்திற்குவெளியே நிற்கவும், ஏழைகள் என்றால் அவர்கள் வீட்டில் புகுந்து கொட்டமடிக்கவுமான இழிநிலை ஏன்? இந்த நிலையை மாற்றுங்கள்! இல்லையேல் உணர்ச்சி மிகுந்த வங்க மக்கள் நம் அரசாங்கத்தை மாற்றியமைப்பார்கள்!"

—என்று கர்ஜனை புரிந்தனராம் வங்கத்துக் காங்கிரஸ்காரர்கள்!

ஆம், மக்களுக்காக வாதாடுகின்றனர்! உலகத்துக்குத் தெரிய வாதாடுகிறார்கள்! உண்மையை ஒளிக்காமல் — மறைக்காமல் வாதாடுகின்றனர்!

யார் அவர்கள்?—காங்கிரஸ்காரர்கள்! காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள்!

அவர்களுக்கு பதவிபெரிதல்ல! தினசரிப்படி பெரிதல்ல; நூற்றியைம்பது ரூபாய் பெரிதல்ல!

மக்களின் நன்மையே பெரிது; அவர்களின் நல்வாழ்வுக்காகப் போராடுவார்கள்; ஊர் தெரிய உண்மைக்கு வாதாடுவார்கள்!

ஆனால்.... நம்மவரோ?

வங்க நாட்டிலுள்ள உணவுப் பஞ்ச நிலை, நம் தென்னாட்டிலும் இல்லாமலில்லை. முன்பு அரிசி விலை என்ன? இப்போதைய அரிசி விலையென்ன?—என்று சிந்தித்தால், நம் மாநிலத்திலும் பஞ்சத்தின் 'காலடி ஓசையை'க் கேட்கலாம்! அதிலும் குறிப்பாக சென்னையில் தொழிலாளரின் வாழ்க்கைப் புள்ளி 432—ஆக உயர்ந்திருக்கிறது. இதற்குக் காரணம் அரிசி விலையேற்றமே என அரசாங்கத்து அறிக்கை கூறுகிறது. இதைப் பற்றியெல்லாம் காங்கிரஸ் சட்ட உறுப்பினர்களுக்குக் கவலையில்லை!

'மந்திரியுடன் பழகுகிறோம்!—என்ற பெருமை போதும்—மக்கள் மந்தையெனச் செத்தாலும் பரவாயில்லை.

'கவர்னர் கைகுலுக்குகிறார்—என்ற 'சிறப்பு' இருந்தால் போதும், களியையும் கூழையும் உண்ட மக்கள் அது கூடக் கிடைக்காமல் அல்லற்பட்டாலும் பரவாயில்லை!

'திண்டு போட்ட நாற்காலியில் சாய்ந்திருந்தால் போதும். தினசரி அலவன்ஸ் கிடைத்தால் போதும்—என்றிருக்கிற காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்த மாநிலத்தில் ஏராளம்; ஏராளம்.' என வங்கத்தையும் நம் நாட்டையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர் கூறுவர்!

'வங்க நாட்டைப் போல் இந்த மாநிலத்தில் உணவுத் தட்டுப்பாடு இருக்கிறது; வாழ்க்கைப் புள்ளி உயர்ந்திருக்கிறது; அதன் காரணகர்த்தர்களான பதுக்கல்காரர்களும் இருக்கிறார்கள்! அவர்களைக் கண்டு பிடித்துத் தண்டிக்காத சர்க்காரும் உண்டு!

'ஆனால் அந்த மாநிலத்தில் இருப்பதுபோல் அரசாங்கத்தைக் கண்டிக்கும் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கில்லை! மக்களின் கஷ்ட நஷ்டங்களை எடுத்தோதும் கருணையுள்ளம் கொண்டவர்கள் இல்லை! மக்களைக் காக்கத் தவறி விட்டவர்களைக் கடிந்துரைக்கும் நேர்மையாளர்கள் இல்லை!

'ஆனால்...சட்ட மன்றத்தில் இதுவரை ஓரிரண்டு தடவையே பேசியவர்கள் உண்டு!

'ஓரிரண்டு தடவைகூடப் பேசாது கையைத்தூக்கித் தூக்கி அலுத்துக் கொண்டவர்கள் உண்டு.

'பேசினால் ஏதாவது விளைந்துவிடுமோ ? — பெரியவர்களின் பொல்லாங்கு வந்து விடுமோ என அஞ்சுகிறவர்கள்—தாசர் புத்தி படைத்தவர்கள் உண்டு. தஞ்சாவூர் பொம்மைகள்-கொலுவிற்றிருக்கும் பொம்மைகள்-வாய் திறக்காத உருவங்கள் உண்டு!'

—என்பதைத்தான் வங்கத்தின் சட்டமன்ற உறுப்பினர்களையும் நம் உறுப்பினர்களையும் உற்று நோக்கி, ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள் கூறுவார்கள்!

இந்த நிலைமாறி — மக்களின் குறையைப் போக்கிடும் அரசும்—பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்களும் தோன்றும் நாள், எந்நாள் என நாட்டின் நலத்தில் அக்கறையுள்ளோர் நாள்தோறும் எண்ணி ஏங்குகிறார்கள்!

## தூங்கினாலும் தட்டி எழுப்புவார்! தன்னாடு வளம்பெற எண்ணுவார்!

★

கையை விரித்துவிடுகிறார்கள், தென்னாட்டுத் திட்டத்திற்குப் பணம் வேண்டுமென்றால்! அவர்களின் நெஞ்சம் கருங்கல்தான் என்கிற முடிவுக்கு வந்திடும் அளவிற்கு அலட்சியம் காட்டுகிறார்கள். தென்னாடு என்றாலே அவர்களையும் அறியாமலேயே ஓர் அலட்சியம்!

ஆனால் வடநாட்டில் தொழில்கள் அளவையும் மீறி திணிக்கப்படுகின்றன. அண்மையில்...

பல இலட்சம் ரூபாய் செலவில் இயந்திரங்கள் வாங்கப்பட்டன!

அவற்றில் பல நூற்றுக்கணக்கான இயந்திரங்களும் தளவாடங்களும் பயன்படுத்தாமலேயே தூங்குகின்றனவாம்!

அவற்றின் மதிப்பு ஏறத்தாழ 8-லட்சம் ரூபாய் இருக்குமாம்!

இதைக் கேள்வியுற்ற மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம், "ஏன் உடனடியாக தகவல்தெரிவிக்கவில்லை? தெரிவித்திருந்தால் ஆவன செய்திருக்கலாம்; தடையை நீக்கியிருக்கலாமே ?" என்று சீறினாராம்.

சீறியிருக்கிறார்—காரணம் அவருக்கு வடநாடு சீக்கிரம் முன்னேற வேண்டும்; தொழில் வளம் பெருக வேண்டும் என்ற ஆவல்—பேராவல்!

ஆனால் நம் அமைச்சர்களுக்கு......?

வெள்ளி 3—7—59 சென்னை

# குழந்தை மனம்!

"விண்ணகத்து அம்புலியைப் பிடித்துத் தா—என்று கத்தும் குழந்தை புத்தி படைத்தவர்கள்தான் தேன்னகத்துக்கு விடுதலையைத் தா—என்று கேட்கும் பிரிவினைவாதிகள்!"

—தனியரசு கோருகின்ற விடுதலை இயக்கத்துக்கு வகைவகையாகப் பட்டயங்கள் தருகின்ற ஏக இந்தியப் பித்தர்கள், இப்படியும் புதுப் பெயர் சூட்டிக் களிக்கிறார்கள். இவ்விதம் பேசித் தீர்ப்பதன் மூலம் தங்கள் கருத்தின்மேல் மக்கள் மன்றம் காணுகின்ற மாசைக் களைந்துவிட முடியும் என்றும் மனப்பால் குடிக்கிறார்கள்.

விடுதலை இயக்கம் குழந்தைதான் என்பதை வாதத்திற்காகவே ஒத்துக் கொண்டாலும், அந்தக் குழந்தையின் கண்கள் பார்வை யிழந்துவிடவில்லை; அதன் குறுகுறுத்த விழிகளிலே பட்டுத்தெறிக்கின்ற கொடுமைகளும் கொஞ்ச நஞ்சமல்ல!

வடக்கத்தி ஏகாதிபத்தியவாதிகளின் வஞ்சக நெஞ்சைக் கூர்ந்து கவனிக்கும் பேராற்றலை அந்தக் குழந்தை பெற்றிருக்கிறது. அந்த வஞ்சகத்தால் தெற்கு தாங்கிக் கொண்டிருக்கும் எண்ணவொண்ணு இடுக்கண்களையும் புரிந்து கொண்டுவிட்டது!

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற குழந்தை அடைந்து விட்ட அந்தத் தனித் தன்மையால் வெளிப்பட்ட உண்மைகளும், வேதனைக் கதைகளும் ஏராளமாகும்! நாள்தோறும் தரப்படுகின்ற அந்தத் தொகுப்பிலே இப்போதுகூட சிலவற்றை மக்கள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கிறோம்.

தொழில் துறையிலே தென்னகத்துக்கு இழைக்கப்பட்டு வருகின்ற அநீதி குறித்த ஆதாரங்களை ஆயிரம் ஆயிரமாக நாம் காட்டியிருக்கிறோம். "அல்லலுறும் இனத்தாரின் அவல வாழ்வு துடைக்கப் படவில்லையே; அதற்குத் தேவையான இரக்கச் சிந்தையில் கடுகளவும் அந்தக் கங்கைவெளிக்காரர்களிடம் இல்லையே!" என்றும் புலம்பியிருக்கிறோம். ஆனல் நம் தாழ்நிலையைப் புரிந்து கொண்டவர்கள், மேலும் மேலும் நமது வாழ்வைப் பாழ்படுத்தத்தான் துடிப்போடு கிளம்புகின்றார்கள்.

தென்னகத்தின் கனிச் செல்வங்கள் அனைத்துமே பூமி மாதாவின் மடியிலே கிடந்து மக்கிடத்தான் வேண்டும் என்று கருதுகிற டெல்லி மூலவர்கள், அதேநேரம் வடக்கை வளங் கொழிக்கும் பொன் நிலமாக மாற்றப் பெரு முயற்சியில் ஈடுபட்டு விட்டார்கள்!

★ பம்பாய்—'ஆலை நகரம்' என்று அழைக்கப்படுவது! நிமிர்ந்த இடமெங்கும் புகைபோக்கிகள் எண்ணற்றுத் தென்படுகின்ற இயந்திரக் கழனி! அங்கேதான் மீண்டும் தொழிற்சாலைகள் அநேகம் ஏற்படுத்தத் திட்டம் வகுத்திருக்கிறது, அந்த மாநில அரசு; அதை அனுமதிக்கவும் தயாராக இருக்கிறது மத்திய அரசு!

படிக்கிற நேரத்திலே திகைப்புதான் ஏற்படுகிறது; 40 புதிய தொழில்களாம்—55 கோடி ரூபாயில் திட்டங்களாம்!

ஒரு அலுமினியத் தொழிற்சாலை—

ஒரு 'நைட்ரஜன்' உர உற்பத்தித் தொழிற்சாலை—

ஒரு 'பில்ஸ்டன் கார்பைட்' தொழிற்சாலை—

மேலும் ஒரு காகித உற்பத்தித் தொழிற்சாலை—

'அசைடேட் ரேயான்', 'விஸ்கோஸ் ரேயான்'—ஆகிய தொழிற்சாலைகள்—

மிகப் பெரிய அளவில் இயந்திரக் கருவிகள் தயார் செய்யும் தொழிற்சாலை ஒன்று—

இவை மட்டுமேல்ல; மோட்டார் வாகன உற்பத்திசாலை ஒன்றும், மருந்து அடைக்கும் கண்ணுடிக் கூடுகள் தயாரிக்கும் தொழிலகம் ஒன்றும்கூட நிறுவப்பட இருக்கின்றனவாம்!

இவைகளைத் தவிர நான்கு மிகப் பெரிய தொழிற் பண்ணைகள் அமைக்க வேண்டும் என்றும் அந்தத் திட்டத்தைத் தயாரித்த குழு மிகவும் வலிவுறுத்தியிருக்கிறதாம்!

★★ மற்றுமொரு புதிய செய்தி இப்போது கிடைத்திருக்கிறது. வெப்பம் கொழிக்கும் பாலை நிலத்தைச் சுந்தரச் சோலையாக மாற்ற புதிய நதி ஒன்றையே வெட்டிக்கொண்டிருக்கிறார்கள், ராஜஸ்தானத்தின் குறுக்கே!

133 மைல் நீளத்திற்குப் புதிதாக வெட்டப்படுகின்ற அந்த நதிக்கு 66 கோடி ரூபாய்தான் முன்னல் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தத் தொகையையும் தாராள மனமுடையவர்கள் இப்போது அதிகப்படுத்தி விட்டார்கள். நதி வெட்டப்பட்டு—அதன் வழியே நீரோடி—மணல் பறக்கும் அந்தப் பாலைவனம் வளம் கொழிக்கும் விளைநிலமாக மாறுவதற்கு ரூ. 85 கோடியை ஒதுக்கி விட்டார்கள்!

'நதியில் அணைகட்டப் பணமில்லை; பாலம் போட வகையில்லை' என்று இங்கு ஏமாந்தவர்களுக்குப் பதில் தருகின்றவர்கள்தான் இயற்கை உற்பத்தி செய்யாத நதி ஒன்றையே உருவாக்கிக் காட்டுகிறார்கள், அங்கே!

★★★ தொழில் துறையில் மட்டுமேல்ல; 'கிராமங்கள்தான் இந்த நாட்டின் உயிர்' என்று சொன்னரே; இன்று ஆள்வோரது ஆசான் காந்தியார்; அந்தக் கிராமங்கள்கூட தெற்கே இடம் பெற்ற காரணத்தால் கவனிப்பாரற்றுவிட்டன! குடி தண்ணீர் கிடைக்காத கிராமங்களில் தண்ணீருக்கு வசதி செய்ய புதிய திட்டம் ஒன்றை அமுல் நடத்தி வருகின்றனர், மத்திய அரசினர். எல்லா மாநிலங்களிலுமுள்ள 96 மாவட்டங்களில் 227 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதன் மூலம் 9,792 கிராமங்கள் பலனடைந்து வருகின்றன.

இப்படி 'ஏக இந்திய' ரீதியில் புள்ளிவிவரம் தருகின்ற அரசினர், இந்தத் திட்டத்தின் மூலம் எவ்வளவு ரூபாய்களைத் தென்னக மாநிலங்களுக்குச் செலவழித்திருக்கிறார்கள்? கிராமங்கள் அதிகம் கொண்ட தெற்கே அவர்களது கருணையால் குறை நீங்கியவை எத்தனை?

இந்தக் கணக்கைப் பார்க்கிற நேரத்தில்தான் அனுமதிக்க முடியாத அவர்களது துரோக சிந்தை நமக்குப் புலப்படுகிறது.

அந்தத் தொகையிலே, சென்னை மாநிலத்திற்குக் கிடைத்திருப்பது 158 55 இலட்சம் ரூபாய்தான்!

மைசூருக்கு 108·20 இலட்சங்கள்தான்!

ஆந்திராவிற்கு 12·5 இலட்சங்கள்தான்!

ஆனல் மத்திய அமைச்சரவைக்குப் பெருவாரியான அமைச்சர்களை அனுப்பி வைத்திருக்கும் பெருமைகொண்ட உத்தரப் பிரதேச மாநிலம் பெறுகின்ற தொகையோ 322·31 இலட்சங்களாகும்! வடக்கே இருக்கின்ற காரணத்தால் பம்பாய் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 293 72 இலட்சங்களாகும்!

இப்படிக் குடி தண்ணீர்த் திட்டத்தில் மாத்திரமல்ல; எல்லா துறைகளிலேயுமே தென்னகம் மிகக் கொடுமையாகப் புறக்கணிக்கப்படுவதை நம்மிடையே நடமாடுகின்ற அடிமை விரும்பிகள் வரவேற்கிறார்கள்!

ஆனல் அவர்கள் மொழிப்படி அப்பழுக்சற்ற தூய உள்ளம் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் என்ற குழந்தையோ எதையும் மறைக்கவில்லை; கண்களில் படுவதை மக்கள் மன்றத்தின் முன்னே காட்டுகிறது! அதை எடுத்தெறிந்து பேசும் இயல்பு கொண்டவர்கள் கண நேரம் தங்கள் உள்ளத்தையும் தூய்மையானதாக மாற்றிக் கொள்ளட்டும்; பின்னல் மாற்றிக் கொள்வார்கள் தங்கள் வழியை! ௐ

# பேனாவியம்

## எழுத்துக்கள் அழியும்-எதிரிகள் எண்ணமும் குலையும்!

மூன்பக்கமுள்ள எழுத்துக்களைப் புரிந்து கொள்ளுகிறவர்கள், இங்கே நூற்றிலே ஒருவர் இருந்தால் அதுவே ஆச்சரியத்திலும் ஆச்சரியம்!

பலருக்குத் தெரியாத ஒன்றைத் தெரிந்தவரை 'மேதை' என்று சொல்வார்கள்; பலர் சொல்லாத ஒன்றைச் சொல்பவரை 'அறிஞர்' என்று போற்றுவார்கள்! இப்படி உத்தமர்களை உருவாக்குகின்ற உலகத்தின் போக்கிலே மாறுதல் தெரிகிறது இங்கே! ஆமாம்.... இந்தச் சொல்லைப்புரிந்துகொள்ளும் சக்தி படைத்த ஒருவரை—மன்னிக்க; மதிப்புத்தர பேனாவே மறுக்கிறது—'ஒருவனை' அந்தப் பட்டியலிலே சேர்க்க மறுக்கிறார்கள், அந்த எழுத்துக்களைப் புரியாத இனத்தைச் சேர்ந்தவர்கள்!

அதுமட்டுமல்ல; அத்தகைய சொல்லைப் புரியாதவரை நோக்கிப் புலம்புகிறவர்களை—அதற்கு வக்காலத்து வாங்குகிறவர்களை-- தமிழ் மனம் பாராட்ட முன்வரவில்லை

மாறாக,

"மானமற்ற ஈனப் பிறவியே!

"மாதாவையே சந்தைக்கு அழைத்து கற்பை ஏலம் கூறுகின்ற இழி குணக் கடைமகனினும் கேடானவனே!

"விழியிருந்தும் குருடன்போல் சொந்த மொழி காக்கத் தெரியாதவனே! வந்த பழி போக்கத் துணியாதவனே!

"நீ இனி இருந்தென்ன; போயென்ன? உன் குருதியிலே குவிந்து கிடக்கும் துரோக அணுக்கள் ஒன்றுக்குப் பத்தாவதற்குமுன் நீ செத்தாவது தொலைந்துபோ!"

—இப்படி இருதயத்தை இரும்பாக்கிக் கொண்டுதான் தன் உடன்பிறந்தவனைக்கூட சபித்துத் தீர்க்கிறது, இன்று சங்கடமான கட்டத்திற்குத் துரத்தப் பட்டுவிட்ட தமிழினம்!

பிரச்சினைக்குரிய அந்த எழுத்துக்கள்...

ஆண்ட இனத்தின் மாண்ட புகழை மீட்டிடத்தான் வேண்டும் என்று போர்ப் பரணி பாடுகின்றோரின் குரல்வளையை நெறித்துப்போட குதித்து வரும் எழுத்துக்கள்!

சரிந்துபோன் சரித்திரத்தை; எரிந்துபோன இனப் பெருமையை; எட்டு திக்கும் வெற்றி கண்டு கொட்டு முரசே என்று ஆர்ப்பரித்த வரலாற்றை மற்றொரு முறை சமைத்திடத்தான் வேண்டும் என்று புறப்பட்டோரின் புறமுதுகு காண விரும்பின் குறைமதி கொண்டவர்கள் அழைத்து வரும் குறை கோடி கொண்ட சொல்!

காலத்தால் முன் தோன்றிய மூத்தகுடித் தமிழை — ஞாலத்தால் புகழாரம் சூட்டப்பட்ட மொழியை—பதவி மோகத்தால் வீழ்த்திவிடத் துணிகின்ற வேகத்தால் நுழைந்துவிட்ட விபரீதக் குறி!

ஆமாம்; அது ஒண்டவந்த சொல்! அண்டியபின் நம் அகம் கீறும் ஆபத்தான கருவி! நம் வரலாற்றில் ஒன்றாத வடக்கத்திச் சரக்கு!

### "ஆகாஷ்வாணி!"

ஏன் தெரிய வேண்டும் இந்த எழுத்துக்கள்? எதற்காகப் படிக்க வேண்டும் இந்தச் சொல்லை?

"தெரியாது எனக்கு!" என்று சொல்வதிலே சிறுமையைக் காணமாட்டோம்!

"அதை இருந்த இடம் தெரியாமல் செய்ய வேண்டும்!"—என்று சொல்வதிலேதான் மகத்தான பெருமையைக் காண்போம்!

முத்தாரம் தவழ்ந்த கழுத்திலே நச்சுத் தலை கொண்ட கருநாகம் நெளிய முடியுமா?

அழகுச் சிலையொத்த ஆணழகனின் உள்ளம் தொட்டப் பெண்ணழகி, நாளை நாற்றமெடுத்த உடல்கொண்ட குஷ்டரோகிக்கு மாலையிட முடியுமா?

குலமகள் வாழ்ந்த குடிசையிலே, சோரம் போனவளை 'வருக வருக' என்ற வரவேற்று "நடத்தடி உன் மானம் கெட்ட வாழ்க்கையை!" என்று அனுமதிக்க முடியுமா?

"முடியாது; முடியாது" என்று குரல் எழுப்பக் கூடியவர்கள் தான், இதிலே மட்டும் மூர்க்கத்தனமாக நடக்கிறார்கள்!

'வானொலி' என்ற வெல்லமென இனிக்கும் நல்ல தமிழ்ச் சொல் ஒலித்த இடத்திலே, இந்த உச்சரிக்கத் தடுமாறும் உலுத்து போன மொழி எதற்காக?

சுந்தரத் தமிழ் தெரியும் பல கையிலே—அதன் பக்கத்திலே தந்திரத்தால் வந்துவிட்ட இந்தி எழுத்துக்கள் இடம் பெறலாமா?

இருக்கலாமா இந்த இழி நிலை? அமைச்சர்களுக்கே புரியாத எழுத்துக்கள்—அதிகாரிகளுக்கே தெரியாத சொல்—வானொலி நிலயத்து வாசலிலே பதியத்தான் வேண்டும் என்பதிலே என்ன பொருள் இருக்கிறது?

மொழியிலே வளம் உண்டா? அது பிறப்பெடுத்த வடக்கிலே தான் நல்ல வரலாறு உண்டா? அதை வலுக்கட்டாயமாகத் திணிக்கின்றார்களே; அவர்களது இதயத்திலேதான் இரக்கமுண்டா?

தரணிக்கோர் இலக்கணமாய் தமிழகம் விளங்கிய காலத்தில் விந்தியத்திற்குப் பின்னாலே மாடோட்டி வந்தவர்களாயிற்றே அந்த வடக்கத்தி மகானுபாவர்கள்!

இங்கே கொற்கையும் தொண்டியும், முசிறியும், பூம்புகாரும் தோன்றியபின்னர்தானே அங்கே காமரூபமும் பாடலிபுரமும் பிறப்பெடுத்தன!

தமிழனது வெற்றி முரசு வானத்து இடியை வெட்கித் தலை குனிய வைத்த நேரத்திலெல்லாம், அந்த வானத்தை நோக்கி காயத்திரி மந்திரங்களல்லவா ஒலித்தன கங்கை நதி தீரத்தில்!

அங்கே மரத்துக்குப் பொட்டிட்டார்களே; அப்போது இங்கு மரக்கலமே புறப்பட்டது; பண்டங்கள் ஏற்றி—பின்னால் படையும் கூட்டி!

மாட்டின் நெய்யெடுத்துசந்தை கூட்டினார்கள் அங்கே! ஆனால் உலகத்துச் சந்தையிலே தமிழன் எடுத்துச் சென்ற முத்துக் குவியலும், மயிர்ப்பீலியும், சந்தனமும், பட்டும் ஈட்டிய பெருமை சொல்லத் தரமற்றதாயிற்றே! எடுத்தெழுதும் வலுவற்றதாயிற்றே எம் கரங்கள்!

கண்ணகிக்குச் சிலை வைக்க வடக்கத்தி மன்னர்கள்கல்லெடுத்தார்கள்! காவிரிக்குக் கரைகட்ட சிங்களத்துக் கைதிகள் மண் சுமந்தார்கள்!

அந்தோ அவமானமே! இப்படிப் புகழ் சேர்த்து வாழ்ந்த இனத்தின் புன்சிரிப்பைக் குலைத்துப் போடுகிறார்களே தமிழினத்திலே 'புல்லுருவி'களாகப் பிறந்து விட்டவர்கள்!

ஒன்றல்ல; இரண்டல்ல; துறைகள் பலவற்றிலும் இந்தத் துரைத்தனத்தார் திணிக்கின்றார்கள் இந்தியினை! தொடை நடுக்கம் கொண்டவர்கள் நடுங்கும் கரங்களால் தூக்கிவிட்டார்கள் இந்தி மொழி ஏடுகளை! ஆனால் படை நடத்தித் தடை உடைத்த பரம்பரையிலே வந்தோம் நாமென்று உணர்ந்தவர்கள், கொள்கைப் பிடிப்பையும், குன்றா உறுதியையும் கருவிகளாகப் பிடித்துக் களம் குதிக்கத் துவங்கிவிட்டனர்!

மானம் பெரிதென வாழ்ந்தவர்கள் மற்றுமொருமுறை தமிழ் மாதாவின் புகழ் காக்கத் தயாராகிவிட்டனர்!

தூங்கும் புலிகளை இடறிவிட்டார்கள்; ஓங்கிய கரங்கள் இனித் தாழாது; கர்வத்தால் வீங்கிய மண்டைகளை உடைக்காமல் ஓயாது—என்று போர் முழக்கம் செய்துவிட்டது தமிழகம்!

அப்படிப்புத்துணர்ச்சி பெற்று புதுப்பண் பாடுகிறவர்களை நோக்கிக்கைவிலங்கு நீளுகிறது; காராக்கிரகம் வாய்திறக்கிறது!

காரணம், கதராடை தரித்தோர்—தமிழினத்தில் பதராய் நடமாடுவோர் தலை நிமிர்ந்து செல்கின்ற நிலைமையால்—காலம் அவர்களை வாழவைத்திருக்கின்ற மடமையால் — வடக்கின் கால் அவர்கள் தலையிலே பதிந்திருக்கின்ற கொடுமையால்!

இந்த நிலை இனியும் நீடித்தால், ஏற்கெனவே வெந்த உள்ளம் தாளவே தாளாது என்றுணர்ந்தனர், தென்னகத்தின் விடுதலை இயக்கத்தினர். ஆகவேதான் துறையூரிலே கூடிய தீரர் முகாம்—திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தீர்மானம் போட்டு ஆட்சியினருக்கு 'அபாயவிளக்கு' காட்டியிருக்கிறார்கள்.

"வானொலி என நீண்ட காலமாக வழங்கப்பட்டு வந்ததை எதேச்சாதிகாரமாக 'ஆகாஷ்வாணி' என மாற்றியதோடல்லாமல், இது குறித்துத் தமிழக மக்கள் விடுத்துள்ள வேண்டுகோள், நடத்திவரும் கிளர்ச்சிகள், அறப்போராட்டங்கள் ஆகியவைகளையும் மதிக்காமல்,

[தொடர்ச்சி பக்கம்—9]

நகரத்தில் நடப்பவை — 7

"லஞ்சம் ஒழிந்துவிட்டது!"

# ஆங்கிலக் கனியிருக்க; இந்தி எனும் காய் எதற்கு?

ஆங்கிலத்துடன் நம்முடைய நாட்டிற்குள்ள இரு நூற்றாண்டுத் தொடர்பு, அறிவை, ஆற்றலை, உலக உறவைத் தந்துள்ளது. இந்த நன்மைகளை, ஏதோ இரண்டாந்தர அரசியலைத் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கென நடத்திக்கொண்டிருக்கும் ஒரு சில இந்தி வெறி பிடித்த அரசியல்வாதிகளின் காலடியில் வீசி எறிவதா? இக்கேள்விக்கு உலக சரித்திரம் எனும் நீதி மன்றத்தின் முன்னே இப்போதைய தலைமுறையினர் விடையளித்தாக வேண்டும்.

ஒரே உலகம்—என வளர்ந்து வரும் கருத்தை நினைக்கும்போது ஆங்கிலத்தின் முக்யத்துவத்தை உணர மறுப்பதேன்? விலைமதிப்பில்லா வருங்காலத் தலைமுறையின் நன்மைக்கு நாம் உழைக்க வேண்டாமா?—என்றால், ஆங்கிலத்தின் முக்யத்துவத்தைக் குறைக்க நமக்குரிமை இருக்கிறதா?

மாடோட்டி மலைமேடு கடந்து வந்தோர்களின் மொழியாம் வடமொழி 'மறைமொழி' யாக்கப்பட்டு, வேற்று மொழி என மக்களால் எண்ணப்பட்டு, மறைந்து, மாய்ந்து போன கதையை நாம் அறியமாட்டோமா? ஆனால் இன்றோ வேற்றுமொழியான வடமொழியின் தாசர்கள்தான் ஆங்கில எதிர்ப்பணியின் தளபதிகளாக விளங்குகிறார்கள். என்னே விந்தை?!

ஆங்கிலத்திற்கெதிராக இன்று யார் யார் தீக்குழிவெட்டி வெறியாட்டம் ஆடுகிறார்களோ அவர்களெல்லாம் தங்கள் பிள்ளைகளை—பேரப் பிள்ளைகளை ஆங்கிலம் போதிக்கும் மேல் நாட்டிற்கு அனுப்புவது ஏன்?

ஆங்கிலம் இந்த நாட்டுடன் நெருங்கிய தொடர்புள்ளது. அதை அன்னிய மொழி எனக் கூறுவோர், இரண்டு நூற்றாண்டுகளாக இந்நாடு ஆங்கிலம் பயின்றதைப்பற்றி என்ன கூறுகிறார்கள்? எந்த மொழியால் இருநூறு ஆண்டுகள் ஆளப்பட்டோம்? எந்த மொழியில் இந்திய தேசியக்காங்கிரஸ் இதுவரை நடத்தப்பட்டது? — இத்தனை ஏன்? எந்த மொழியில் இந்திய அரசியல் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது? ஒரு நாட்டின் உயிர்ப் பொருளாம்—உயிர் மூச்சாம் அரசியல் சட்டம் ஒரு அன்னிய மொழியில் இருந்திட, வெட்கம் கெட்டு இவர்கள் அலைவது ஏன்?

● ஆங்கிலம் இருக்கும் பீடத்தில் இந்தி மொழியைக்கொண்டுவர நினைக்கிறார்கள். அந்தமொழியின் இலட்சணத்தை விளக்கிட ஒரு உதாரணம் இதோ: 'கல்' என்ற இந்தி வார்த்தைக்குப் பொருள் என்ன தெரியுமா? நேற்று, நாளை!—ஒரே சொல்லுக்கு இரண்டு பொருள். அதுவும் முரண்பட்ட பொருள்! சந்தர்ப்பத்தைத் தெரிந்துகொண்டுதான் அது நேற்றா?—இல்லை, நாளையா என்று கண்டுபிடிக்க வேண்டும்? அதிசய மொழி! இத்தகைய 'லட்சணம்' படைத்த மொழி இந்திய ஆட்சி மொழியாகப் போகிறது!

● இந்திய ஆட்சி மொழியாக்கிட அவர்கள் கூறும் காரணம், அம்மொழி பெரும்பான்மையினரால் பேசப்படுகிறது என்பதுதான்!—இது தவறு. பெரும்பான்மையான இந்திய(த் துணைகண்ட) மக்கள், தம் வட்டார மொழிகளையேதான் பேசி வருகின்றனர்.

40 கோடி மக்களில் 3 கோடி இந்தி பேசுவோர் பெரும்பான்மையாம்! குறைந்த அளவு 21 கோடிப் பேராவது இந்தி பேச வேண்டாமா? — ஆனால் இங்கே 3 கோடிப் பேர் பெரும்பான்மையினராம்! ஐயகோ, அப்பாவிப் பொதுமக்கள் முன்பு எவ்வளவு பெரிய புளுகுக் குண்டைப் போடுகிறார்கள்!

இந்தி பேசும் மக்களிலும் எண்ணத் தொலையா வேற்றுமைகள் மலிந்திருக்கின்றன. ஆதார இந்தி. வடமொழிக் கலப்புள்ள இந்தி. தூய வடமொழிக் மலப்புள்ள இந்தி, பாரசீகம் கலந்த இந்தி, நாட்டுப்புற இந்தி, ரோமன் இந்தி, உருது கலந்த இந்தி, இந்தி, — இத்தனையும் இருக்கின்றன.

● புதுச் சொற்கள் வேக வேகமாகக் கண்டுபிடிக்கப்படுகின்றனவாம், இந்தி மொழியில்! ஏன் இந்த வேகம்? ஏன் இவ்வளவு அவசரம்? — வடக்கிந்தியா மற்ற பகுதிகளின்மேல் ஆதிக்கம் செலுத்த விரும்புகிறது என்பதைத்தானே இச் செயல் காட்டுகிறது?

எனில், உண்மையான தேசிய மொழி எது? 1[illegible] மொழிகள் தேசிய மொழியாகப் பட்டியல் போடப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் இந்த மண்ணுக்குரியவைதானா? இல்லை. இந்த மொழிகள் பெரும்பாலும் வடமொழி, தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலிருந்தே பிறந்திருக்க வேண்டும். வடமொழியோ ஆரியர்களால் இங்கு இறக்குமதி செய்து உருவாக்கப்பட்டது. ஆகவே தமிழ்தான் இந்நாட்டிலேயே இருந்த—இருக்கிற மொழி! எனவே தமிழ் மொழிதான் இந்திய தேசிய மொழி ஆக வேண்டிய மொழி. இதை வடவர்கள் ஒத்துக் கொள்வார்களா?

ஆட்சி மொழியாக ஆங்கிலம் இருக்குமென்றால். உலக அறிவு பெருகும். ஆங்கிலம் உலக மொழியல்ல—என்று யாராவது மறுக்க முடியுமா? அதுதான் உலகத்தின் கண்ணும் காதுமாக இருக்கின்றன என்பதை யாராவது மறுக்க முடியுமா? இதை மறுப்பதானால் — உலக உறவு வேண்டாமென்றால் மறுபடியும் அறியாமைக் குட்டையில் விழ வேண்டியதுதான்! இலைதழைகளைக் கட்டிக்கொண்டு திரிந்த கற்கால வாழ்விற்குத் திரும்ப வேண்டியதுதான்!

....ஆங்கிலத்தை எதிர்த்து இந்தியைத் திணிப்பவர்களின் உள்நோக்கம் என்ன? ஏகாதிபத்தியம் தானே? இல்லையென்றால் இதற்கு வேறு என்ன பெயர்? தென்னகம், பஞ்சாப், வங்காளம் ஆகிய நாடுகளில் வடக்கு ஏகாதிபத்ய நிலை அடைந்துவிடுமோ?—எனும் வலிவு பெறும் சந்தேகத்தில் எப்படித் தவறிருக்க முடியும்?

....இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் எல்லா மக்களும் பங்கேற்கிறார்கள் என்றாலும் அரசாங்கம் இதை உதாசீனப்படுகிறது. இதே தவறு பிரஞ்சு நாட்டில் கொடுங்கோலன் 14-ம் லூயின் அழிவு காலத்தில் நடந்தது! மீண்டும் அத்தவறு புரியாதீர்கள்!

.... ஆங்கிலம் அன்னிய மொழி என்றால், தென்னகத்தாருக்கு இவர்களின் இந்தி அன்னிய மொழிதானே.

இந்த இந்திமொழியை யார் தேசிய மொழியாக்கியது? ஒரே ஒரு வோட்!, ஒரு வோட் வேற்றுமையில்தான் இந்தி தேசிய மொழியாயிற்று!

....நம் அரசாங்க முதல்வர்களின் ஒரே ஒரு குறிக்கோள், தங்களுக்குப் பதவி தரும் 'இந்திவாலா'க்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதுதான்!

...நாடு குழப்பத்தில் இருக்கிறது! அழிவுப் பாதையில் நடைபோடுகிறது!

....நில்! நில்!!—என்ற எச்சரிக்கைக் குரல் தருகிறார்கள் மக்கள்; எதிர்காலத்தைப் படம் பிடித்துக்காட்டிப்போராட நினைக்கிறார்கள் நல்லறிவாளர்கள்!

இந்தி மொழி ஆட்சியாக வேண்டும் எனக் கூறுபவர்களின் வாதத்தைத் தொகையாக நிறுத்தித் தூள் தூளாக்கும் பணியில் தென்னகத்து விடுதலை இயக்கம்ஈடுபட்டிருக்கிறது. அதைத் தனிப்பட்ட நல்லறிவாளர்களும் ஏற்கின்றனர், ஐசக் மத்தாய் எம். ஏ. (ஆனர்ஸ்) என்பாரும் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார்; பம்பாயிலிருந்து அவர் வெளியிட்டுள்ள ஆங்கில அறிக்கையின் சில கருத்துக்களைக் கீழே தருகிறோம்.

### டாக்டர் சத்தியவாணி முத்து

மூகவரி மாற்றம்

●

பெரம்பூர் தொகுதி வசதிக்காக 7—6—59 முதல் எனது இல்லத்தைக் கீழ்க்காணும் முகவரிக்கு மாற்றியுள்ளேன். தொடர்பு கொள்வோர் இனி, இம்முகவரிக்கே தொடர்பு வைத்துக்கொள்ளவும்.

நெ. 24 சி, ஹைதரி தோட்டம்,
கிருஷ்ணதாஸ் ரோடு,
சென்னை-12.

இப்படிக்கு,
சத்தியவாணிமுத்து
(பெரம்பூர், தொகுதி சட்ட மன்ற உறுப்பினர்)

## மண்ணுக்கு மண் மாறிடும் மனுநீதி!

★

"பெயர் மாற்றமா?

"பெயரும் புகழும் தேடும் வேலையற்றவர்களின் வேலையல்லவா, அது? டால்மியாபுரமா?—அது இருந்துவிட்டுப் போகட்டுமே! வடவன் பெயரில் ஒரு ஊரின் பெயர் இருந்தாலென்ன? வேலை கெட்டவர்களே! வடநாட்டான் நம் எஜமான். அவன் மூச்சுக்கு எதிர்மூச்சு விடக்கூடாது; ஜாக்கிரதை! சாகுபுரமா?—அந்தப் பெயரால் உனக்கென்ன வந்தது? இப்பெயரை நேரு கேட்டால் எங்களை மெச்சுவார்! தட்டிக் கொடுப்பார்! சீச்சீ! ஓடிப்போ! உலகம் தெரியாதவனே!"

—என்று மமதையோடு கூறவேண்டும். மந்திரிகள்! 'மாற்ற மாட்டோம்' என்று அடம்பிடிக்க வேண்டும்.

அதற்காகப் போர்படை கிளம்பிற்றென்றால் இரத்தப் பசி எடுத்த சிறுத்தை எனச்சீறிப் பாயவேண்டும்; சிரம் கொய்யவேண்டும்; பீறிடும் பச்சை ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கவேண்டும்.

—இது தென்னாட்டுக்கென டில்லி மூலவர்களால் வகுக்கப்பட்ட 'ரெடிமேட்' நீதி!

* * *

அந்த ஊருக்கென பிளாட்பாரம் போட்டாகிவிட்டது!

டிக்கட் தரும் அலுவலகம் திறந்தாகி விட்டது.

டிக்கட் மூட்டை மூட்டையாக வந்திறங்கியுள்ளது!

அந்த மூட்டையைப் பாதுகாக்க ஒரு ஆளும் வந்துவிட்டான்!

ஆனாலும்...அந்த ரயில்வே பிளாட்பாரத்தில் ஆடுமாடுகள் மேய்கின்றன.

ஊழியர்கள் எவரும் வேலைக்கு வரவில்லை!

மக்கள் யாரும் ரயிலில் ஏறுவதில்லை!

ரயிலும் அங்கு நிற்பதில்லை!

ஏன் இந்த அவலம்? இதற்கு என்ன காரணம்? அந்த இரயில்வே நிலயத்திற்கு என்ன பெயர் வைப்பது என்பதில் எழுந்த தகராறுதான் காரணமாம்!

முன்னாள் 'பெப்சு' மாநிலத்தின் முதல்வராயிருந்த 'ரகுவீர் சிங்' என்பவர் பெயரால் அந்த ரயில் நிலயம் அழைக்கப்படுவதென முடிவு செய்து டிக்கட்டுகளிலும் அச்சடித்துள்ளனராம்!

ஆனால்...அதை உள்ளூர்வாசிகள் எதிர்த்தனராம்!

ஏராளமான பொருட்செலவில் கட்டப்பட்ட இரயில் நிலயம் பாழானாலும் பரவாயில்லை மக்கள் எதிர்ப்புக்கு மதிப்புக் கொடுத்திருக்கிறது, அரசு!

—இது வடக்கிற்கு டில்லி வழங்கும் மனு நீதி!




## 7

யவனக் கிழவர் திடீரெனத் தன்னை நோக்கிக் குதிரையைத் திருப்புவதை முத்துநகை உணர்ந்தாள். ஒருக்கணம் அவளுக்குத் திகைப்பு. அடுத்த கணம் இனி அங்கு நிற்கக் கூடாது என்ற முடிவு. தன் குதிரையைத் தட்டிவிட்டு எப்படியாவது தப்பிவிட எண்ணினாள். இருங்கோவேள் தான் யவனக் கிழவராக இருக்க வேண்டும் என்று அவள் செய்திருந்த யூகம் வலுப்பெற்றுவிட்டது அவன் கையில் சிக்கினால் தன் லட்சியம் எதுவும் நிறைவேறாமல் போய்விடும் என்ற பயமும் அவளைப் பதற வைத்தது. குதிரையை வேகமாகத் தட்டி அதன் விலாப்புறத்தில் நுனிக் காலால் குத்தி நாலுகால் பாய்ச்சலில் பறக்க விட்டாள்.

யவனக் கிழவரும் விடவில்லை. அதிவேகமாகத் தொடர்ந்து துரத்தினார். காடு மேடுகளில் இரண்டு குதிரைகளும் காற்றைப்போல் நுழைந்து சென்றன. தனக்கோ போரிடும் திறமை கிடையாது. இளமையிற் கற்ற குதிரையேற்றமும் ஒரு சிறிது வாட்பயிற்சியும் இருங்கோவேள் போன்ற மாவீரர்களை எதிர்த்து நிற்கப் பயன்படாது என்ற பயம் அவளை மேலும் வேகமாக ஓடச் செய்தது. யவனக் கிழவர் வரும் குதிரையின் குளம்படிச் சப்தம் முத்துநகையின் இருதயத் துடிப்பால் எழும் ஒலியின் முன்னே நிற்க முடியுமா என்பது சந்தேகமே! ஆனாலும் அவள் உள்ளத்தில் ஒரு உறுதியான லட்சியம் இருந்தது. இருங்கோவேளிடமிருந்து தப்பி அந்த லட்சியத்திற்காக உழைக்க வேண்டும் என்றுதான் அவள் கருதினாளே தவிர, "அய்யோ! வீண் வம்பை விலைகொடுத்து வாங்கி விட்டோமே!" என்று கோழைத்தனமாக அவள் எண்ணவில்லை. உளவறிய வந்த இடத்தில் தனியாக சிக்கிக் கொண்டவள் ஓடாமல் என்ன செய்யமுடியும்— இப்படி ஒரு ஆறுதல் அவளுக்கு!

எங்கெங்கோ ஓடி, சுற்றி, கடைசியில் யவனக் கிழவரிடமிருந்து தப்பித்துக் கொண்டாள். மரங்கள் அடர்ந்த பகுதி ஒன்றில் சந்தடியின்றி அவளும் குதிரையும் நின்று கொள்ளவே, யவனக் கிழவர் வேகமாக நேராக ஓடி ஏமாந்து விட்டார். கிழவரின் குளம்படி ஓசை குறைந்ததும் முத்துநகை தன் குதிரையை வேறு பக்கம் திருப்பினாள். களைத்துப் போன நிலையில் குதிரை ஆடி அசைந்து நடந்தது. அவளும் பெருமூச்சு விட்டவாறு சோர்வுற்று உட்கார்ந்திருந்தாள். தாமரையையும் வேறு சில பெண்களையும் சந்தித்தது— யவனக் கிழவரிடம் சிக்கியது— இவையிரண்டையும் எண்ணிப் பார்க்கும்போது இருங்கோவேளின் இருப்பிடம் அந்தப் பகுதியில்தான் இருக்கவேண்டுமென்றும் அந்தப் பெண்கள் இருங்கோவேள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கக் கூடுமென்றும் அவள் தீர்மானித்தாள். அவர்களிடம் செழியன் அகப்பட்டிருந்தால் என்ன பாடு படுத்துவார்களோ என்ற கவலையும், இந்நேரம் அவனை என்ன செய்திருப்பார்களோ என்ற அச்சமும் — அவளைக் கலங்கச் செய்தன.

## தாமதம் - அதனால்...

அந்த இளம் பெண்ணுள்ளத்தில் சோழப் பெருநாட்டு எதிர்காலம் பற்றிய நினைவுகள் சுழன்றோடி அவளை அறியாமலே ஒரு வெற்றுச் சிரிப்பையும் வரவழைத்தன. கரிகால் பெருவளத்தான் திண்தோள் கொண்ட பெருந்தீரன். அவனிடமுள்ள படைகளோ யாராலும் வெல்ல முடியாத பலங் கொண்டவை. அப்படிப்பட்ட ஆற்றலுடையானைச் சதித் திட்டத்திலேயிருந்து காப்பாற்றும் பொறுப்பு தன்னிடம் விடப்பட்டிருப்பதை எண்ணித்தான் அந்தச் சிரிப்பு வெளிப்பட்டது முத்துநகைக்கு.

நீண்ட நெடுந் தூரங் கடந்து இறுதியில் புகார்ப்பட்டினத்தின் விளிம்புக்கே வந்துவிட்டாள். துறைமுகத்திற்கு அருகாமையில் அவளது குதிரை மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. தமிழகத்துப் பொருள்களை நாவாய்களில் ஏற்றிடும் காட்சியைக் கண்டு மகிழ்ந்தவாறு குதிரையை நடத்திச் சென்றாள். மயில் தோகைகளை புற்கட்டுகள்போல எடுத்துச் செல்லும் அழகை— மிளகு மூட்டைகளை வரிசையாக அடுக்கியிருக்கும் எழிலை — வளைந்த வாழைத்தண்டுகள் போல் யானைத் தந்தங்களை குவித்திருக்கும் கண்கொள்ளாக் காட்சியை விழிகளால் சுவைத்தாள்.

அதே சமயம் இத்தனை பெருமைக்குரிய நாட்டில் துரோகிகளும் எதிரிகளும் பெருகி வருகிறார்களே என்று நொந்துகொண்டாள். குதிரை மருவூர்ப்பாக்கத்தின் எல்லையை மிதித்தது. வணிகர்களும் ஏனைய தொழில் வல்லாரும் பரபரப்புடன் தங்கள் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். வீதி யோரத்தில் முத்துநகை இரு மருங்கிலும் கண் பார்வை செலுத்தியவாறுபோய்க் கொண்டிருந்தாள். அவளது காதில் "அன்பே சிவம்! பண்பே சைவம்!" என்ற முழக்கம் கேட்டது.

குதிரையை நிறுத்திவிட்டு கவனித்தாள். பத்துப் பதினைந்து சிவனடியார்கள் கூட்டமாகவந்து கொண்டிருந்தார்கள். முத்துநகைக்குத் தூக்கிவாரிப் போட்டது. செழியனைத் தூக்கிச் சென்றதுபோல் வேறு ஏதோ ஒரு சூழ்ச்சியில் ஈடுபட இருங்கோவேளின் ஆட்கள் ஊரில் நடமாடுகிறார்கள் என்று முடிவு கட்டிக் கொண்டாள்.

அடியார் கூட்டத்தைத் தொடர்ந்து சென்றாள். அவர்கள் மருவூர்ப்பாக்கத்தின் எல்லா வீடுகளிலும் சென்று சைவ முழக்கம் செய்தனர். சில பெரிய வீடுகளில் அவர்கள் நுழைந்து பொருள் பெற்று பூரிப்போடு வெளியே வந்தனர். முத்துநகைக்கு ஆத்திரம் தாங்கவில்லை. துரோகிகள் தாங்கியிருக்கும் தூய்மையான வேடம்பற்றி அவள் உள்ளத்தில் பெரும் போராட்டம். எப்படியும் இன்று அவர்கள் முயற்சி பலிக்காமல் செய்துவிடவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டாள். நாட்டைக் கவிழ்ப்பதற்கு வேடமிட்டுத் திரியும் வேங்கைகளின் உண்மை உருவத்தைத் தெரிந்து கொள்ள முடியாமல் சோழத் திருநகரின் மக்கள் ஏமாளிகளாய் இருக்கிறார்களே யென்று அவள் மனம்வெதும்பினாள். வாசனைப் பொடியும் குங்குமக் குழம்பும் சந்தனமும் நறுமணப் புகைப் பொருள்களும் கையிலேந்தி விற்பவர்களுக்கும், அவைகளை வாங்கி மகிழ்கிறவர்களுக்கும் இடையிலே முற்றும் துறந்தவர்களைப்போல அந்த அடியார்கள் சென்றது அவளுக்குப் பெருஞ்சினத்தை மூட்டியது. பட்டும், பவளமும், பொன்னும், மணியும், முத்தும் பொருந்திய அழகு மிழும் அணிகலன்களை விற்பவர்களிடையே கொட்டை கட்டிகளாக வேடமிட்டுக் கொண்டவர்கள் நடமாடுவதை அவளால் சகிக்க முடியவில்லை.

கூவியழைத்து அனைவரையும் ஒன்று கூட்டி அந்தச் சிவனடியார்களை வளைத்துக் கொள்ளலாமா என்று எண்ணினாள். இப்படிச் செய்தால் இருங்கோவேளின் சூழ்ச்சி அம்பலமாகாது போய்விடும். அவனும் விழித்துக் கொண்டு எச்சரிக்கையாக நடந்து கொள்ள வழி வகுத்தது போலாகிவிடும் எனப் பயந்து அந்த அடியார்களைப் பின் தொடர்ந்தாள்.

மருவூர்ப்பாக்கம் தாண்டி அந்த அடியார்கள் பட்டினப் பாக்கத்துப் பக்கம் சென்றார்கள். வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெருங்கல் மன்றம், பூத சதுக்கம், பாவை மன்றம் முதலிய இடங்களைக் கடந்து சென்ற அவர்களை அவள் விடாமல் தொடர்ந்தாள். வெள்ளிடை மன்றத்தைக் கண்டதும் அவளுக்குக் கண்கலங்கிற்று. அந்த மன்றத்தின் பெருமையை நினைத்துப் பெருமூச்செறிந்தாள். அந்த மன்றத்தில் யார் வேண்டுமானாலும் தங்களுக்குரிய வியாபாரச் சரக்குகளை மூட்டைகளாகக் கட்டி உரியவர் பெயரை எழுதி அங்கே போட்டுவிட்டுத் தங்கள் வேலைகளைக் கவனிக்கலாம். அந்த மன்றத்திற்குக் கதவுமில்லை.

இந்த இதழ்—இடநெருக்கடியால் தொடர்கதை மூன்று பக்கம் வரவில்லை. அடுத்த இதழ் முதல் வாசகர்கள் விருப்பம் போல் மூன்று பக்கங்களில் வெளிவரும்.

காவலுமில்லை. அப்படியிருந்தும் ஒரு மூட்டையும் களவு போவதில்லை. இத்துணை சிறப்பு மிகுந்த நீதி செழித்திருக்கும் நாட்டில் — ஒழுக்கம் நிறைந்த பூமியில்—துரோகிகள் முளைத்து விட்டார்களேயென்று ஏங்கினாள்.

தன் தந்தையை நினைத்துக் கொண்டாள். அடியார்கள் போகும் வழியைத் திரையிட்டு மறைப்பது போல்அவள் கண்களின் முன்னே நீர்த்திரை விழுந்தது. புத்த விகாரம் முதலிய இடங்களைக் கடந்து அந்த அடியார்கள் சிவன் கோயிலுக்குள்ளே நுழைந்தார்கள். முத்துநகைக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது அந்த நிகழ்ச்சி. இருங்கோவேளின் ஆட்கள் என்றால் இவ்வளவு தைரியமாக சிவன் கோயிலுக்குள்ளே நுழைவார்களா என்று குழப்பமடைந்தாள்.

குதிரையை விட்டு இறங்கி உள்ளே சென்று கவனித்தாள். அவளுக்கு உண்மை விளங்கி விட்டது. அவர்கள் யாரும் இருங்கோவேளின் ஆட்கள் அல்ல. புகார் நகரைச் சேர்ந்த உண்மையான சிவனடியார்கள்தான். தன் தவறுக்கு முத்துநகை வெட்கப்பட்டாள். ஆயினும் அவள் சிந்தனை எங்கேயோ ஓடித்திரும்பியது. ஓலையொன்றை எடுத்து அவசர அவசரமாக அதில் எழுதினாள்.

“அன்பு மிகுந்த சிவனடியார்களே! வணக்கம். நமது தலைநகரில் எதிரிகள் சிலர் அடியார்கள் வேடத்தில் புகுந்து துரோக வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு உதவியாக நீங்கள் சில திங்களுக்கு வெளியில் வராமல் கோயிலிலேயே இருந்தால் நலம். தயவுசெய்து என்னை யாரென்று கேட்காதீர்கள். வணக்கம்.”

அந்த ஓலையை முத்துநகை அடியார் கூட்டத்தலைவரிடம் கொண்டு போய்க் கொடுத்து விட்டு பதிலுக்குக் காத்து நின்றாள்.

அடியார் கூட்டத் தலைவர் **திருநீற்றடியார்** நடுத்தர வயதுடையவர். வாட்டசாட்டமான உருவங் கொண்டவர். முகத்தில் அருளை வரவழைத்துக் கொண்டுதான் யாரையும் நோக்குவார். காரணம் இயற்கையிலேயே அவர் முகத்தில் அருளை விட அதிகமாக வீரமும் கம்பீரமும்தான் மின்னிக்கொண்டிருக்கும். அவர் முத்துநகையை உற்றுப் பார்த்தார்.

“விடாதீர்கள் இவனை! இவன்தான் ஏதோ துரோகம் செய்ய வந்திருக்கிறான்!” என்று திருநீற்றடியார் கத்தினார்.

மற்ற அடியார்கள் முத்துநகையைச் சூழ்ந்து பிடித்துக் கொண்டார்கள். அந்தக் குழப்பத்தில் அவள் ஆண்வேடம் கலைந்தது. அழகுமயமான ஆரணங்கு எதிரே நிற்பதை அடியார்களின் தலைவர் கண்டார். பொன்னுருக்கிச் செய்ததுவோ—புலவர்களின் கற்பனையோ—என எண்ணத்தக்க விதம் தனியாக நின்று கொண்டிருக்கும் ஏந்திழையைக் கண்டதும் திருநீற்றடியாரின் இதயம் காய்ச்சிய ஈயமென உருகி விலா எலும்புகளைத் தீய்த்து, சுவாசப் பைகளைச் சுட்டெரித்து, அடிவயிற்றைப் பற்ற வைத்து, அத்தனை ரத்தக் குழாய்களிலும் பாய்ந்தோடிற்று.

சூழ நின்ற மாணவர் குழாத்தைத் திருநீற்றடியார் கடைக் கண்ணால் பார்த்தார். அவர்கள் மறைந்தனர். அவளைக் கரம் பற்றி இழுத்தார். ஓங்கி ஒரு அறை கொடுத்தாள் முத்துநகை. நெற்றியில் உள்ள முப்பட்டைபோல் அவர் கன்னத்திலும் அவளது விரல்கள் பதிந்து ரத்தக் கோடுகளைக் கிழித்தன.

அதற்குமேல் அடியார் பொறுத்துக் கொள்ளவில்லை. தாவிப் பாய்ந்து அவளைத் தன் உடலோடு சேர்த்து அணைத்து கோயிலுக்குள்ளேயுள்ள இன்னொரு பகுதிக்குள் நுழைந்திட முனைந்தார்.

அப்போது “ஏய், நில்!” என்ற குரலோடு ஒரு உருவம் அடியாரின் பிடரியில் ஒரு அடி கொடுத்தது. முத்துநகை வியப்புடன் திரும்பினாள். யாருமில்லை. அதே யவனக் கிழவர்தான்!

கிழவரை அடியார் எதிர்த்தார். அடியார் கூட்டமே அங்கு வந்து விட்டது. யவனக் கிழவரின் வாள் அவர்களை நோக்கிச் சுழன்றது. அடியார்கள் கிழவரின் புலிப்பாய்ச்சல் கண்டு அங்குமிங்கும் ஓட ஆரம்பித்தார்கள்.

இதுதான் சமயமெனக் கண்ட முத்துநகை, தன் ஆண் உடைகளைச் சரிசெய்து அணிந்து கொண்டு வெளியே ஓடி குதிரையில் ஏறிப் பறந்தாள். கோயிலுக்குள்ளே என்ன ஆயிற்று எனத் தெரிந்து கொள்ள அவளுக்கு ஆவல். வெகுதூரம் போய் மீண்டும் கோயில் பக்கமாகத் திரும்பி வந்தாள். அவள் கோயில் பக்கம் வருவதற்கும், யவனக் கிழவர் கோயிலுக்குள்ளேயிருந்து வெளியில் வந்து குதிரையில் ஏறிப் போவதற்கும் சரியாக இருந்தது. யவனக் கிழவர், தன்னை கவனிக்காதவாறு பாதுகாப்பாக ஒளிந்து கொண்டாள் ஒரு மண்டபத்துக்கு அருகே!

சற்று நேரம் கழித்து, கோயிலைச் சுற்றிக் கொண்டு குதிரையை மெதுவாக நடத்தியவாறு தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டாள். அவளுக்கு மேலும் மனப்போராட்டம் துவங்கியது. யவனக்கிழவனுக்குத் தான் யாரென்று தெரிந்திருக்குமா? முத்துநகைதான் ஆண் உடையில் உலவுகிறாள் என்பதை அவன் புரிந்து கொண்டால் என்ன செய்வது? இப்படிப் பல கேள்விகள் அவள் உள்ளத்தை நிலை தடுமாறச் செய்தன. கோயிலுக்குள்ளே யவனக்கிழவன் தன்னை முத்துநகையாகத்தான் கண்டான். தான் மீண்டும் ஆண் வேடம் தரித்ததை அவன் பார்த்திருக்க வழியில்லை. இப்படியும் தன்னைத் தானே அவள் தேற்றிக் கொண்டாள். யவனக்கிழவன் வேடத்திலேயுள்ள இருங்கோவேள் தன்னை ஏன் காப்பாற்ற வேண்டும்? தன்மீது அவனுக்கு ஏன் இவ்வளவு பிரியம்? இதற்கும் பதில் கிடைக்கவில்லை.

அந்தத் திருநீற்றடியாரின் போக்கினைக் கண்ட பிறகு அந்தக் கூட்டத்தின்மீதே வெறுப்பு ஏற்படுகிறதே! மண்ணாசை — பொன்னாசை — பெண்ணாசை விட்டவர்களின் நேர்மைக்கும் ஒழுக்கத்திற்கும் இதைவிட அவமானகரமான உதாரணம் வேறென்ன வேண்டும்—அவள் அலைக்கழிந்தாள். அதற்குள் அவள் வீட்டு வாசலும் வந்து விட்டது.

குதிரையை நிறுத்திவிட்டு வீட்டை நோக்கினாள். வாயிற்புறத்தில் ஒரு குதிரை கட்டப்பட்டிருந்தது. மெதுவாக இறங்கிக் கதவோரம் சென்று உள்ளே கவனித்தாள். தந்தையும் அந்த யவனக் கிழவரும் மிகவும் ரகசியமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். பேசிக் கொண்டிருந்தவர்களைப் பார்க்க முடிந்ததே தவிர, பேசிய விஷயங்களைக் கேட்க முடியவில்லை. முத்துநகைக்கு ஆவேசம் பிறந்தது போன்ற ஓர் உணர்ச்சி. உடனே அரண்மனைக்குச் சென்று கரிகாலரிடம் சொல்லி வீரர்களை அழைத்து வந்து யவனக் கிழவரைப் பிடித்துக் கொடுத்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு புறப்பட்டாள், ஆத்திரத்தில் என்ன செய்கிறோம் என்று புரியவில்லை. தன் வீட்டிலேயிருந்து இருங்கோவேளைப் பிடித்துக் கொடுத்தால் தன் தந்தையும் காட்டிக் கொடுக்கப்படுவாரேயென்று அவள் நினைக்கவில்லை; நினைக்க நேரமில்லை. அவள் நெஞ்சில் ஊசலாடியதெல்லாம் சோழ நாட்டுப் பெருமையும் பற்றுந்தான்!

குதிரை அரண்மனை நோக்கி விரைந்தது. கரிகாலனின் மாளிகையில் முத்துநகை நுழைந்தாள். மன்னரை அவசரமாகப் பார்க்க வேண்டுமென்று துடித்தாள். மன்னர் தனிமையில் உலவிடச் சென்றிருக்கிறார்; இப்போது இயலாது—என்று பதில் கிடைத்தது. மெய்காப்பாளனிடமிருந்து.

“யாருமில்லாமல் மன்னரைத் தனியாகச் செல்லவிடலாமா?” என்று முத்துநகை கவலையோடு கேட்டாள்.

அதற்கு மெய்காப்பாளன், “கரிகாலனைத் தனியாக எதிர்த்து யாரும் வென்றிட முடியாது. அது பற்றிய கவலை யாருக்கும் தேவையில்லை!” என்று பதில் கூறினான்.

உடனே முத்துநகை, “இருங்கோவேளைக் கையுங் களவுமாகப் பிடிக்க இதுவே தருணம். என்னோடு ஐம்பது வீரர்களை அனுப்ப வேண்டும்!” எனப் பதறினான்.

மெய்காப்பாளன் சற்று யோசித்து, “அரசர் உத்திரவின்றி அனுப்பக் கூடாதே!” என்று தயங்கினாள்.

“எனக்குத் தேவையானவற்றை அளிக்குமாறு அரசர் முன்பே கூறியிருக்கிறாரே — இப்போது நான் கேட்பது எனக்காக அல்லவே—இந்த நாட்டுப் பகைவனைப் பிடிக்கத்தானே!” என்று விளக்கமுரைத்து வற்புறுத்தினாள்.

மெய்காப்பாளன், தன் அதிகாரத்தின் கீழுள்ள வீரர்களில் ஐம்பது பேரை முத்துநகையின் பின்னே அனுப்பி வைத்தான். அவள், அவர்களை அழைத்துக் கொண்டு இருங்கோவேளைப் பிடித்துவிட்டோம் என்ற வெற்றிக் களிப்போடு தன் வீடு நோக்கிச் சென்றாள்.

திடுமென அரண்மனை வீரர்கள் ஐம்பது பேர் தெருவிலே வெகு வேகமாகச் செல்வதைக் கண்ட தலைநகரத்து மக்கள் அதிர்ச்சியடைந்தனர். வீட்டுக்குள்ளிருந்தவர்கள் அனைவரும் வீதிக்கு ஓடிவந்தனர். முன்னே சென்றுகொண்டிருந்த முத்துநகை, குதிரையைப் பிடித்திழுத்து நிறுத்தினாள். அவளுக்குப் பெருத்த ஏமாற்றம்!

தன் வீட்டு வாசலில் கட்டப்பட்டிருந்த யவனக் கிழவரின் குதிரையைக் காணவில்லை. இறங்கி வியப்போடு வீட்டைப் பார்த்தாள். வீடு பூட்டப்பட்டிருந்தது.

“தாமதித்து விட்டோம்; தப்பி விட்டான் துரோகி!” என்று முணுமுணுத்தாள் முத்துநகை. ஆயாசத்தோடு எல்லா குதிரைகளும் அரண்மனை நோக்கித் திரும்பின.

முத்துநகை ஒரு ஓலையில், “தாமதம்; அதனால் தப்பிவிட்டான்.” என எழுதி அதை மெய்காப்பாளனிடம் கொடுக்குமாறு சைகை செய்து ஒரு வீரனிடம் தந்து விட்டு வேறுபக்கமாகத் தன் பயணத்தைத் தொடர்ந்தாள்.

# குளித்தலை - முசிறி காவிரிப் பாலம்

## கவர்னரிடம் வேண்டுகோள் அளிக்க கையெழுத்து வாங்கும் வாரம்

[ ஜூலை 1-முதல் 13-ந் தேதி முடிய ]

வரும் ஜூலைத் திங்கள் 15-ந் தேதியன்று நமது பகுதிக்கு வருகைதர இருக்கும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்களிடம் குளித்தலை — முசிறியை இணைக்கும் காவிரிப் பாலம் எவ்வளவு அவசியமானது என்பதை எடுத்து விளக்கவும், ஆயிரக் கணக்கான மக்களின் வேண்டுகோளைச் சமர்ப்பிக்கவும் நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. **மு. கருணாநிதி** அவர்களின் தலைமையில் ஒரு தூதுக்குழு செல்ல இருப்பதால், பொது மக்களின் ஆதரவைத் திரட்ட ஜூலை 1-ந் தேதி முதல் 13-ந் தேதி முடிய முசிறி—குளித்தலை கழக நண்பர்கள் நேரில் வந்து பொது மக்களிடம் கையெழுத்து சேகரிக்க இருக்கிறார்கள். பொது மக்கள் முழு ஆக்கமும் ஊக்கமும் அளித்திட வேண்டுகிறோம்.

— தி. மு. கழகம், குளித்தலை (26—6—59)

# வழிபறிக் கூட்டத்தினரே; நீங்கள் வழிகாட்டிகளல்ல!

“பேராசை, வெறி, அயோக்கியத்தனம் நாட்டில் பரவி விட்டன. இதனைப் பிரதிபலிப்பவர்கள் அரசாங்கத்து அதிகாரிகள்!”

— மேற்கண்ட கடுமொழி எதிர்க்கட்சியினரால் பேசப்பட்டது அல்ல.

பேசியிருந்தால், “எதிர்க்கட்சிகளுக்கு என்ன வேலை, எதிர்ப்பதைத்தவிர! அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள்! பொதுமக்களே, நீங்கள் நம்பாதீர்கள். நம் நாட்டில் உள்ள எதிர்க்கட்சிகள் எல்லாம் எதிர்க்கட்சிகளாய் இருப்பதற்கு இலாயக்கற்றவை. இங்கிலாந்தைப் பாருங்கள்; அங்குள்ள எதிர்க்கட்சிகளின் நடத்தையைப் பாருங்கள்! ஆகா, அவையல்லவா எதிர்க்கட்சிகள்?” —என்று ‘சம்பந்தமில்லாவாதம்’ பேசிச் சிரித்து மகிழ்ந்திருப்பர் நம் ஆளவந்தார்கள்!

ஆனால் மேலே கண்ட கடுமொழி எதிர்க்கட்சிகளால் பேசப்படவில்லை!

பின்னர்........? அந்த அதிகாரிகளின் மீது அருவருப்புக் கொண்ட சில ‘வாயாடி’ கவர்னர்கள் கூறினார்களோயென்றால், அதுவுமில்லை!

ஆம்; அந்தக் கடுமொழிகளைக் கூறியவர்கள் அதிகாரிகளே தான்! யாரால் அந்தத் தீமைகள் தோன்றுவதாக — பிரதிபலிப்பதாகக் கூறினார்களோ அவர்களே தான் கூறுகிறார்கள்.

பேராசை, வெறி, அயோக்கியத்தனம் முதலிய நிர்வாகத்திலுள்ள தீமைகளின் பிறப்பிடம் தாங்களே என்று ஒத்துக்கொண்டார்கள்.

எங்கு?.........டில்லியில் அரசினர் அதிகாரிகளாகப் பெரும்பாலும் கூடி பொதுவாக, நிர்வாகத்திறன் குறைந்து வந்துள்ளதை மனம்விட்டு ஆராய்ந்த போது மேற்கண்ட முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

ஆனால் இதே முடிவை எதிர்க்கட்சிகள் தெளிவு, சுளிவோடு கூறியிருந்தால்கூட அதிகாரிகள் சினங் கொள்வர்; அரசாங்க முதல்வர்களோ சீறிப் பாய்வார்கள்.

முந்திரா ஊழலும், அதற்கு முதற் காரணகர்த்தர்களாய் இருந்த அதிகாரிகளின்மேலுள்ள கறையைத் திரை போட்டு மறைத்துவிட முயன்ற செயலும், ‘நேரு பிரான்’ அதிகாரிகளின் பேரில் குற்றம் சுமத்திய நீதிபதிகளைச் சாடிய செயலும் நாடறிந்தவை.

அதிகாரிகளை எதிர்ப்புகளிலிருந்து இப்படிக் காப்பாற்றுவதால் மட்டும் நிர்வாகத் திறன் வளராது; நாட்டின் சீலமும், ஒழுக்கமும் நிலை பெறாது!

அப்படி அவை நிலை பெறாத காட்சியைத்தான் இங்கு காண்கிறோம். எங்கு திரும்பினாலும் ஊழல் நாற்றம்! எப்பக்கம் நோக்கினாலும் லஞ்சப் பேய்!

ரயில்வே கூட்ஸ் ஷெட்டுகளிலும், பார்சல் அலுவலகங்களிலும் சப்தமிட்டே லஞ்சம் கேட்கும் அதிகாரிகளை—கணக்கர்களை நாம் நாள்தோறும் பார்க்கிறோம்!

தாலுக்கா அலுவலகங்களில்—சிரஸ்தார் அலுவலங்களில் — பணத்தைத் ‘தள்ளினால்’ தான் காரியம் நடைபெறும் என்று அதிகாரிகளே கூறும் அவல நிலையைக் காண்கிறோம்.

இந்தக் காட்சிகளுக்குக் காரணகர்த்தர்கள், அதிகாரிகள் மாநாடு கூறியதுபோல் அதிகாரிகள் மட்டுமே என்று நம்மால் கூற முடியாது.

இந்த அரசும்—அரசின் முதல்வர்களுமே முதற் காரணம் என்போம் நாம்; ஆம், தமிழ் நாட்டின் பழமொழியே ‘அரசன் எவ்வழி; குடிகள் அவ்வழி!’—என்பது தான். இந்த அரசும், அரசின் முதல்வர்களும் சீலத்தையும், நேர்மையையும், நீதியையும் கடைப்பிடிப்பார்களேயானால், நாட்டில் தீமைகள் விளையுமா? நீதியற்ற போக்கு தீயெனப் பரவுமா?

அரசாங்க முதல்வர்களின் நீதியற்ற போக்கை நிரூபிக்கும் ஆயிரமாயிரம் உதாரணங்களை பொதுமக்களின் காதுகள் கேட்டுச் சலித்திருக்கின்றன.

ஏன், இப்போதுகூட அம்மாதிரி நீதியையும் நேர்மையையும் தங்கள் காலடிகளில் போட்டு நசுக்கி, அதன் இருதயங்களைப் பிழிந்தெடுக்கும் நிகழ்ச்சி நிகழ்ந்துள்ளது. பஞ்சாப் மாநிலத்தில்!

ஐந்து நதிகள் ஓடி வளப்படுத்தும் அந்தப் பாஞ்சால நாட்டில் மூன்று வண்ணம் போட்ட கொடியேந்திகளான காங்கிரசார்தான் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அந்த ஆட்சி பீடத்து அலங்கார பொம்மைகளில் ஒருவர்தான் கியான்சிங் ரேர்வாலா என்பவர். இவர் பஞ்சாப் மாநிலத்து நீர்ப்பாசன, மின்சார இலாகா அமைச்சர்.

இவர் தனது சொந்த எஸ்டேட்டில் குழாய்க் கிணறு ஒன்றை அமைக்க அரசாங்கப் பணத்திலிருந்து ஏராளமாக எடுத்துச்செலவு செய்துகொண்டாராம்!

தன் வீட்டுக்குழாய்க்கு அரசாங்கப் பணம்!

அதுவும் ஒரு அமைச்சரின் திருவிளையாடல்!!

...மாநில அமைச்சரின் ‘நீதிப் போக்கு’!!!

இதைப் பார்க்கின்ற கீழ்த்தர அதிகாரி என்ன நினைப்பார்!—மனிதனுக்குள் அடங்கிக் கிடக்கிற சுயநல எண்ணம்-பேராசை ‘விசுவரூபம்’ எடுக்காதா, அமைச்சரின் செயலைப் பார்த்து!

வழி காட்டியாய் இருக்க வேண்டிய அமைச்சர் ஒரு வழிப்பறிக்கொள்ளைக்காரனை விட மோசமாக நடந்து கொண்டால், கீழிருந்து வேலை செய்பவனின் எண்ண ஓட்டம் எந்தத் திக்கிலே ஓடும்? ‘எரிகிற வீட்டில் பிடுங்குகிறவரை இலாபம்!’—என்கிற கீழ்த்தரப் புத்தி தானே பிறக்கும்? அந்தப் புத்தி பிறந்தால் பின்னர், நல்ல புத்தி இறக்கும்; நாணயம் மடியும்; நீதி சாகும்; நேர்மை பிணமாகும்!

—இந்த அவலக் காட்சிகள் ஏதோ பஞ்சாபில் நடப்பதாக மட்டும் எண்ணத்தேவையில்லை! நம் நாட்டுச்’ சோகக் கதைகள்’ அதைவிடத் தாழ்ந்ததல்ல. இங்கிருக்கும் அரசாங்க முதல்வர்களும் வழிகாட்டிகளாக இருக்கத் தகுதியுடையவர்கள் தானா? — என்னும் கேள்வியை எழுப்புகின்றவாக பல நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன.

‘பத்து லட்சங்கள்’ காணாமல் போனவிதம்!

‘சென்னை மேயர் ஒருவர் போய்வர நீண்ட சாலையொன்று ஆயிரக் கணக்கான ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட அக்ரமம்!

பெரிய பணக்காரர்கள்-பெருந்தனக்காரர்கள் - வெள்ளைக்காரனால் ராஜா பட்டம் கொடுக்கப்பட்டவர்கள்—அரசியல் செல்வாக்கு—ஆள்பலம்—பண பலம் மிக்கவர்கள் என்பதற்காக அவர்களுக்குரிய அரண்மனைகளுக்கு—அதுவும் சென்னையிலுள்ள பல அரண்மனைகளுக்கு ஏதோ இருநூறு—முன்னூறு என்று ‘குடக்கூலி’ வாங்கும் அநியாயம்!

பட்டக்காரர் — பாளையக்காரர் —தேர்தலில் ஜெயிக்க வைக்கும் செல்வாக்குள்ளவர் என்பதற்காக, அதிகாரியை உதைத்த அந்தச் சீமான் பேரிலிருந்த வழக்கை வாபஸ் பெற்ற அநீதி.

தங்களுக்கு வேண்டியவர்—உறவினர் என்பதற்காக அரசாங்க சட்டத்தை எக்காரியத்திற்கும் முறித்தெறியும் நேர்மையற்ற போக்கு!

தாங்கள் போய் உண்டு களித்து உற்சாகம் கொண்டாட வேண்டுமே என்ற அற்ப ஆசைக்காகப் பெரும் பெரும் ஓட்டல்களுக்கு மிகக் குறைந்த அளவில் ‘வரி’ வாங்கும் சீலமற்றபோக்கு!

அரசாங்கப் பணத்திலேயே ஒரு கட்சிப் பிரச்சாரம்—உல்லாசச் சவாரிகள்-ஊர் சுற்றும் கைங்கரியம்—தன் குடும்பத்திற்கு வசதி தேடிக் கொள்ளும் பச்சைச் சுயநலம் படைத்தவர்கள் என்ற ‘கொடுமைப்பட்டம்’!

—இத்தனை குற்றச் சாட்டுகளை—நீதியற்ற போக்கைச் சுமந்துகொண்டுதான் இந்த அரசின் முதல்வர்கள் அதிகாரிகளுக்கு வழி காட்டிகளாக முயற்சிக்கிறார்கள்.

அவர்களுடைய முயற்சி, வீணாயிற்று; இருள் படுதா கிழிக்கப்பட்டது; டில்லியில் நடந்த அதிகாரிகள் மாநாட்டில்! இவர்கள் நல்லனவற்றிற்கு வழிகாட்டியாக இருக்காவிட்டாலும், தீயனவற்றிற்கு வழிகாட்டிகளாக இருப்பதற்குத் தகுதியுடையவர்கள் தான் என்பதை நிரூபிக்கிறது, கீழ்க்காணும் நிகழ்ச்சி!

“ஆண்டவன்மீதிருந்த அன்பும், சேவை மனப்பான்மையும் அல்ல நான் சமூகப் பணியில் ஈடுபட்டதற்குக் காரணம்; ஏதாவது பதவியொன்றை எப்படியாவது பெறவேண்டும்; பெயரும் புகழும் பெற வேண்டும் என்ற ஆசையே காரணம்”

—என்று அந்த மாநாட்டில் ஒரு பிரபலமான சமூக சேவகி கூறினாராம்.

ஒரு பெண்ணுக்கு—இந்தப் பதவி யாசை இவ்வளவு ஆழமாக வேரூன்ற இடம் தந்தது யார்?—இச்சுயநலப் போக்கிற்கு வழிகாட்டியாய் இருந்தது யார்?

மக்களின் ஆசையை மதியாது பத்தாண்டு, பதினைந்து ஆண்டு என்று பதவி நாற்காலியைக் கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கும் நம் அரசாங்க முதல்வர்களின் ஈடு இணையற்ற பதவியாசைதான்—

மந்திரி சபை எத்தனை மாறினாலும் கவலையில்லை, அத்தனையிலும் நான் ஒட்டிக் கொள்வேன்!—என்று கூறாமற் கூறிடும் ‘அரசியல் உலகத்து இந்திராணிகளின்’ பதவி வெறிதான் அந்தப் பெண்ணுக்கும் பதவியாசையை ஊட்டியது!

பேராசை, பதவி வெறி முதலியவற்றிற்கு வழிகாட்டிகளாகவும், நீதி, நேர்மையைப் பொறுத்தவரை வழிப்பறிகொள்ளைக்காரர்களாகவும் அரசாங்க முதல்வர்கள் விளங்குவதாக மக்கள் கருதுகிறவரை, இந்நாட்டில் நிர்வாகம் ஒழுங்குபெறாது; நிம்மதி வாழ்வு தோன்றாது!

— திருப்பூர் அடியார்

வாழ்க்கை
இந்தத் தலைப்பில்
★
பேரறிஞர் பொன்மொழிகள்
பல இடம்பெறுகின்றன!
“முத்தாரம்”
இதழ் 28-ல்!

## பேனு ஓவியம்...

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் பிடிவாதமாக 'ஆகாஷ்வாணி' என அறிவித்துவரும் வடநாட்டு அரசின் ஆணவப் போக்கினை இம்மாநாடு மிக வன்மையாகக்கண்டிப்பதுடன், திருச்சியிலும், சென்னையிலும் நடைபெற்றுவரும் 'ஆகாஷ்வாணி' எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் இம்மாநாடு மனமாரப் பாராட்டுவதுடன், இந்தத் தூய பணிக்கு வலிவளிக்கத் தயாராக இருக்கும்படி தமிழ் மக்கள் அனைவரையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

"குறிப்பாகத் தமிழகத்திலும் — பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு மாநிலங்களிலும்உருவாகிவளர்ந்து வரும் மக்களின் மகத்தான எதிர்ப்பைச் சிறிதும் மதியாமல் மெஜாரிட்டி பலம் என்ற பெயரால் மூர்க்கத்தனமாக இந்தியைத் திணித்து வரும் வடநாட்டுச் சர்க்காரின் அநீதியையும், ஜனநாயகமற்ற போக்கினையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், திராவிடத்தின்மீது இந்தியைத் திணிக்கும் நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படாவிடில் திராவிட முன்னேற்றக் கழகம் தீவிரப் போராட்டத்தை மேற்கொண்டு இந்தி ஆதிக்கத்தைத் தகர்த்தெறியும் என்பதை இம்மாநாட்டின் வாயிலாக நேரு சர்க்காருக்கு அறிவுறுத்துகிறோம்."

—இந்தத் தீர்மானம் கண்டு, தமிழகம் கண்ணீர் வடிக்கிறது! காலமெல்லாம் அழுது வருகின்ற இனத்தார், இன்று சிந்துகின்ற கண்ணீரோ ஆனந்தக் கண்ணீர்!

"இந்தக் கண்ணீரோடு என் காலம் முடிந்தாலும் பரவாயில்லை; மானம் காத்த போரிலே நானும் ஒரு தாளமுத்துவாக — நடராசனாக மாறிவிட்டுப் போகிறேன்!" —என்று சொல்லுகின்ற இளைஞர்கள்; "பலிபீடத்திற்கு நான் தயார்; முன்னால் பொறித்துக் கொள்ளுங்கள் என் பெயரை!" என்று பாய்கின்ற பெரியவர்கள் ஆயிரக்கணக்கானோர் இன்று அணி வகுத்து நிற்கிறார்கள்!

வடக்கேயிருந்து வீசுகின்ற இந்தி எனும் கொடுந் தீயிலே 'ஆகாஷ்வாணி'யும் ஒரு பொறியாகும்! அந்தப் பொறியை அழிக்கத் துவங்கிவிட்டவர்களைத் தமிழ் மாதா வெற்றிபெற வாழ்த்துகிறாள்! ⁂

— சொர்ணம்


தேன் இன்ப ஊற்றாய் —
தித்திக்கும் கலை ஓவியமாய்
வெற்பனையாகிறது!

**காதல் காவியம்**

எழுதியது:
புதுவைவாணன்
விலை: 50 புதுக் காசு
கண்ணம்மாள் பதிப்பகம்,
16, ஏ. திருவாசகம்
பிள்ளைத் தோட்டம்,
திருப்பாப்புலியூர்,
கடலூர் (என். டி.)

## சிந்தனைச் சிற்பி சிற்றரசு எழுதும் "கலீர்; கலீர்"!

இந்திரா பிக்சர்சார் தயாரித்து வருகின்ற சமூகப் படத்திற்கு சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு அவர்கள் வசனம் எழுதுகிறார்கள். எழுத்தாளர் எல்லார்வி எழுதிய அந்தக் கதைக்கு 'கலீர், கலீர்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். மிகக் குறுகிய காலத்தில் வெளிவர இருக்கின்ற இப் படத்தில் டி. ஆர். மகாலிங்கம், எம். ஆர். ராதா, அஞ்சலிதேவி, ஈ. வி, சரோஜா முதலியோர் நடிக்கின்றனர். ப. நீலகண்டன் டைரக்ட் செய்கிறார். ஒலிப்பதிவை ஜி. துரை மேற்கொண்டிருக்கிறார்.

### சாரதி பிலிம்சாருக்கு மாறன் எழுதுகிறார்!

'காலம் மாறிப் போச்சு' என்ற வெற்றிப் படத்தைத் தயாரித்த சாரதி பிலிம்சார், மறுபடியும் தமிழ்ப்படம் ஒன்றைத் தயாரிக்கத் துவங்கி இருக்கின்றனர். இந்தப் படத்திற்கான திரைக் கதை வசனத்தை எழுத தோழர் மாறன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

இப்படம், நல்ல குடும்பச் சூழ்நிலையை வைத்துப் பின்னப்பட்டிருக்கிறது. 'காலம் மாறிப் போச்சு' படத்தை டைரக்ட் செய்த தாபி சாணக்கியா என்பவர்தான் இதையும் டைரக்ட் செய்கிறார். இன்னும் அதற்குப் பெயர் வைக்கவில்லை.

### நேதாஜியின் சரித்திரம்

விடுதலைப் போராட்ட காலத்தில்—தனிப்படை வைத்து வெள்ளையர்களை விரட்டும் பணியில் ஈடுபட்ட நேதாஜி சுபாஷ் சந்திர போசின் வாழ்க்கையைத் திரைப்படமாகத் தயாரிக்க ஜப்பானியப் படத் தயாரிப்பாளர் ஒருவர் முன்வந்திருக்கிறார். அதற்கான குறிப்புகளைச் சேகரிக்க அவர் இந்தியக் குடும்பங்கள் சிலவற்றுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்.

ஜப்பான் வானொலி நிலையத்தில், பணியாற்றி வருகின்ற இந்தியர் ஒருவர் அப் படத்தில் நடிப்பார். எஸ். டி. கங்காய் என்று பெயர் கொண்ட அவர் ஜப்பான் வானொலியில் இந்திய மொழிப் பிரிவில் வேலை செய்து கொண்டிருக்கிறார். அவருடன் ஜப்பானில் வாழுகின்ற மற்றும் நான்கு இந்தியர்கள் அந்தப் படத்தில் நடிப்பார்கள்.

### நகரசபையில் கலைவிழா!

சென்னை நகரசபையின் ஊழியர் சங்கத்தினர் சென்ற 23—6—59 அன்று கலைவிழா கொண்டாடினார்கள். நகரசபையின் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சித் தலைவர் திரு. என். ஜீவரத்தினம் விழாவைத் துவக்கி வைத்தார். அசோக் விகாரில் நடைபெற்ற அதற்கு நகரசபை ஆணையாளர் திரு. பி. பாலசுந்தரம் தலைமை வகித்தார்.

விழாவில் இளைஞர் நாடகச் சங்கத்தினர் 'புருடஸ்' என்ற ஓரங்க நாடகத்தை நடித்தனர். அடுத்து 'புஷ்பலதா' 'அவரே என் கணவர்' என்ற இரண்டு நாடகங்கள் நடைபெற்றன.

விழாவின் சிறப்புக்குக் காரணமானவர்களைப் பெரிதும் பாராட்டி, இறுதியில் நகரசபை துணைத் தலைவர் திரு. பி. சிவசங்கரன் பரிசுகள் வழங்கினார்.

### கலை வளர்க்கும் மத்திய அரசினர்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு புதிய திட்டம் ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கிறது. கலை வளர்க்கும் பண்போடு ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு நாடக அரங்கை நிர்மாணிக்கப் போகிறதாம்! இதற்காக ரூபாய் 15 இலட்சங்களை ஒதுக்கி இருப்பதாகவும் செய்தி கிடைக்கிறது. மத்திய அரசின் கலாச்சார அமைச்சர் ஹுமாயூன் கபீர் இது சம்பந்தமான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

1961-ம் ஆண்டு, மே திங்கள், 8-ம் நாளுக்குள் அந்த அரங்குகள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு விடுமாம்.

தேவையான திட்டங்கள் பலவற்றுக்கு, கடன் பட்டும் பணமில்லையே என்று புலம்புகிறவர்கள், சர்க்கார் கஜானாவிலிருந்து இந்தத் திட்டத்திற்கு இலட்சக் கணக்கில் செலவிட வேண்டியது அவசியம்தானா — என்ற கேள்வியும் இன்று அரசியல் வட்டாரத்தில் எழும்பியிருக்கிறது.

### வேற்று மொழிப் படங்களில் தென்னக நடிகைகள்!

தென்னகத்துத் திரைப்பட நடிகைகளில் சிலர் இப்போது வேற்றுமொழிப் படங்களில் நடிக்கின்றனர். அதுவும் குறிப்பாக தமிழ்த் திரையுலக நடன நடிகைகளுக்கு அத்தகைய வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தியச் சூழ்நிலையை வைத்து ஆங்கிலப்படம் ஒன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார், ஹாலிவுட் பட நிறுவனங்கள் ஒன்றின் அதிபர். 50 இலட்ச ரூபாய் முதலீட்டில் இந்தியாவிலேயே தயாராக இருக்கும் அந்த வண்ணப் படத்தில் வைஜயந்தி நடிக்கப் போகிறார். பீர் அஞ்செலி என்ற அமெரிக்க நடிகையும் நடிக்கப் போகும் அந்தப் படத்திற்கு "இசைபாடும் மலை" என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, வங்காளத் திரையுலகின் புகழ்பெற்ற டைரக்டரான சுகுமார்தாஸ் குப்தா, நடனத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒரு திரைப்படம் தயாரிக்க முடிவு செய்திருக்கிறாராம். அதில் பிரதம பாகத்தில் குமாரி கமலா நடிப்பாராம். தெற்கேயிருந்து இன்னும் சில நடன நடிகைகளையும் அதில் நடிக்கச் செய்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னகத்தின் நாட்டிய நடிகை பத்மினி பல இந்திப் பல படங்களில் நடித்து வருகிறார். குறிப்பாக தற்சமயம் 'சிங்கப்பூர்' எனும் படத்தில் அவர் நடிக்கிறார். சிங்கப்பூரின் இயற்கைச் சூழ்நிலையை வைத்து எடுக்கப்படுகிறதாம், இப்படம்!

மேகலா பிக்சர்ஸ் 'குறவஞ்சி'யில் இந்த நடனக் காட்சியைக் காணலாம்.



# மனிதனின் கதை

பி. சி. கணேசன்

## 42. சமரச ஞானி அக்பர்

அன்புள்ள மாதவி,

தீர்க்கதரிசி மூகம்மது இறந்து ஒரு நூற்றுண்டுக்குள்ளாகவே, இஸ்லாமியர்கள் உலகப் பேரரசு ஒன்று நிறுவுவதில் வெற்றி கண்டனர். அந்தப் பேரரசு சிந்து சமவெளியிலிருந்து ஸ்பெயின் தீபகற்பம்வரை வியாபித்திருந்தது. ஹரூன்-உல்—ரஷீதுக்குப் பிறகு, இஸ்லாமியப் பேரரசு பற்பல சிறுநாடுகளாகச் சிதறுண்டது. சிதறிய சிறுநாடுகளும் இஸ்லாமிய நாடுகளாகவே விளங்கின. இந்த நாடுகளில் ஆஃப்கனிஸ்தானமும் ஒன்று. ஆஃப்கனிஸ்தானத்திலிருந்த இஸ்லாமியர்கள் பஞ்சாப் மீதும், இந்துஸ்தானத்தின்மீதும் அடிக்கடி படையெடுத்தனர். இஸ்லாமியர்களின் படையெடுப்பை இந்துஸ்தானத்து ராஜபுத்திரர்கள் தீவிரமாக எதிர்த்தனர். அதன் விளைவாக, இந்தியத் துணைக்கண்டத்தின் நிரந்தரத் தலைவலியான இந்து—முஸ்லிம் பிணக்கிற்கு வித்தூன்றப்பட்டது! பன்னிரண்டாம் நூற்றுண்டில் சிந்து—கங்கைச் சமவெளி பூராவுமே இஸ்லாமியர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது.

ஜெங்கிஸ்கான், தைமூர் போன்ற மங்கோலிய வீரர்களைப் பற்றி முன்னமேயே உனக்கு எழுதியுள்ளேன். தைமூரின் வழித்தோன்றலே பாபர்! இவர் காலத்தில் வாழ்ந்த மங்கோலியர்கள் பெரும்பாலும் இஸ்லாமியர்களாகவே இருந்தனர். பதினுறு வயதுச் சிறுவனாக இருக்கும் பொழுதே சாமர்க்கண்டு நாட்டின் அரியணை ஏறியவன் பாபர். இதர பிள்ளைகள், பள்ளிப் பருவத்தில் இருந்த் காலத்திலேயே —கவலைகள் ஏதுமின்றி துள்ளித் திரிந்திடும் பருவத்திலேயே — பாபரின் இளந்தோள்களின்மீது பெரும் ராஜ்யபாரம் வந்து விழுந்தது. பத்து ஆண்டுகளில் பாபர் ஆஃப்கனிஸ்தானத்தை வென்று, அதன் மன்னனுகவும் முடிசூட்டிக் கொண்டான். அதற்கு இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, இந்துஸ்தானத்தின் பசுமையாலும் செழுமையாலும் கவரப்பட்ட பாபர், அதன்மீதும் படையெடுத்தான். பல ஆண்டுகள் கடும்போர் நடத்தியபின் கி. பி. 1526—ல் பானிபட் சண்டையில், இப்ரஹீம்லோடியைத் தோற்கடித்து டெல்லியை பாபர் கைப்பற்றினுன். நான்காண்டுகளுக்குப் பிறகு சிக்ரி போரில் ராஜபுத்திரர்களை வென்ருன்.

பாபர் ஒரு சிறந்த தளகர்த்தன் மட்டுமல்ல; நல்ல கல்விமான். கலா ரசிகன்; காவியச் சுவையில் ஊறித் திளைத்தவன். மதுபானத்தை மிகவும் விரும்பியவன். வாழ்க்கையில் ஒரு சமயம் நெருக்கடி ஏற்பட்டபோது மது அருந்துவதில்லை எனச் சபதம் பூண்டவன்; கடைசி வரையில் அதைக் காப்பாற்றினுன். பாபர் வைராக்யம் மிக்கவன் என்பதற்கு அவன் எழுதி வைத்துள்ள வாழ்க்கைக் குறிப்புக்களில் ஏராளமான சான்றுகள் உண்டு.

பாபருக்குப் பிறகு அவன் மைந்தன ஹுமாயூன் பட்டத்துக்கு வந்தான். தோல்வி ஹுமாயூனை நிழல் போலத் தொடர்ந்தது. ஆஃப்கானியப் பட்டாணியர்கள் அவனுக்குத் தீராத் தலைவலியாயினர். நாடிழந்து, வீடிழந்து, நாடோடியாக ஒடியலைந்தான். அகதியாகத் திரிந்தான்; இப்படி அவன் அகதியாகத் திரிந்த பொழுது தான் மொகலாய சாம்ராஜ்யத்தின் சமரச தீபம் என்று கருதப்படும் அக்பர் பிறந்தார். இந்து மன்னர்களில் அசோகன் பெற்றிருந்த சிறப்பை, தமிழ் மன்னர்களில் ராஜராஜன் பெற்றிருந்த சிறப்பை, மொகலாய மன்னர்களில் அக்பர் பெற்றிருந்தார்.

அக்பருக்குப் பதினுன்கு வயதாக இருக்கும் பொழுது டெல்லி அரியணையை ஹுமாயூன் மீண்டும் கைப்பற்றினுன். சீக்கிரமே ஹுமாயூன் ஒரு விபத்தில் மாண்டு போனுன்; சிறு பையனுக இருந்த அக்பர் டெல்லி சுல்தான் ஆனுர். பொறுப்பு கடுமையானதாக இருந்தது. அரண்மனைக்குள்ளே சூழ்ச்சிக்காரரும் அரண்மனைக்கு வெளியே விரோதிகளும் அக்பரைப் பயமுறுத்தித் திண்டாட வைத்தனர். இந்த நெருக்கடிகளின் போதெல்லாம் அக்பருக்கு உற்ற துணையாக இருந்து வழிகாட்டியாக விளங்கியவன் பெய்ராம்கான். அக்பர், மொகலாய சாம்ராஜ்யத்தைப் பலமான அஸ்திவாரத்தின் மீது கட்டவும், நிலை நிறுத்தவும் வாழ்நாள் முழுவதும் போர்கள் நடத்த வேண்டியிருந்தது. டெல்லி, ஆக்ரா முதலிய நகரங்களில் அமைதியை நிலைநாட்டிய பின், பஞ்சாப், ராஜபுதனம், கூர்ஜரம், வங்காளம் ஆகிய பிரதேசங்களையும் அக்பர் தன் ஆணைக்குள் கொண்டு வந்தார். வெல்ல முடியாத கோட்டை எனப் புகழ் பெற்றதும், ராஜபுத்திர வீரத்தின் விளைநிலம் என அழைக்கப்பட்டதுமான சித்தூர் கோட்டையைப் பிடிக்க அக்பர் செய்த முயற்சிகளும், ராஜபுத்திரர் காட்டிய வீரமும் இந்திய வரலாற்றின் சுவைமிக்க ஏடுகள்!

மாதவி, உலக வரலாறு கண்ட மிகச் சிறந்த மன்னர்களுள் அக்பரும் ஒருவர். சிறந்த தளபதி, பேரரசு கண்டவர், சீர்திருத்தக்காரர், இலக்கியப் பிரியர், கலையின் காவலர் என்பதோடு மட்டும் அக்பரின் பெருமை முடிந்து விடவில்லை. அக்பரின் அரசியல் ஞானத்தையும், சமரச நோக்கையும், தீர்க்கதரிசனத்தையும் அவர் வாழ்ந்த காலம், சூழ்நிலை ஆகியவற்றின் பின்னணியில் பார்க்கும் போது, அக்பர் மனிதருள் மாணிக்கமாக, மன்னர்களுள் மாமன்னராகக் காட்சியளிக்கிருர். எத்துறையையும் தனது கூர்த்தமதியால் உய்த்துணர்ந்து அதில் தன் ஆற்றலை வெளிப்படுத்தியவர் அக்பர். அநிதி யாருக்கு இழைக்கப்பட்டாலும், அந்தஸ்து பேதமின்றி—மதபேதமின்றி அதைக் களைய முற்பட்டார். ‘மக்களின் அநீதி களைவதில் மகத்தான அக்கறை காட்டிய அக்பருக்கு இந்திய வரலாற்றில் ஒழுங்கான நீதி வழங்கப்படவில்லை!’ என அக்பரின் வாழ்க்கையை சுவைமிக்க வரலாருக எழுதியுள்ள ஜெயேந்திரா மணிலால் குறிப்பிடுகிருர்.

நாடோடி மனப்பான்மையோடு வாழ்ந்த மங்கோலியர்களை நாகரிகப்படுத்தி, நாடாளும் பண்பினை ஏற்படுத்தியவர் அக்பர். இந்தியாவின்மீது படையெடுத்த இதர மங்கோலியத் தலைவர்களெல்லாம் இங்கே பேரரசு நிறுவ அக்கறை காட்டவில்லை; அப்படி அக்கறை காட்டியவர்களும் தங்கள் பற்றையெல்லாம் தாயக மண்ணிலேயே வைத்திருந்தனர். முதன் முதல் நிலைத்த மொகலாயப் பேரரசை இந்தியாவில் நிறுவி, இந்திய மண்ணைத் தன் தாயகமாக எண்ணி அன்பு செலுத்திய மொகலாய மன்னன் அக்பர் தான். அந்த எண்ணம்தான் தன் ஆட்சியில் இந்து-முஸ்லிம் வேற்றுமையின்றி ஒரு தேசிய இனத்தைத் தோற்றுவிக்கும் வேலையில் அக்பரை ஈடுபடச் செய்தது. அதற்காக மதவெறி தாண்டவமாடிய காலத்தில்,பெரு நோக்கோடும் சமரச மனப்பான்மையோடும், இந்துக்களையும் முஸ்லிம்களையும் இணைக்க அக்பர் எத்தனையோ வழிகளைக் கையாண்டார்.

முதல் வழியாகக் கலப்புத் திருமணத்தைக் கையாண்டார். தன் தளபதிகளுக்கும் மற்றவர்களுக்கும் ராஜபுத்ரப் பெண்களைத் திருமணம் செய்து வைத்ததோடு ஜெயப்பூர் இளவரசியான ஜோதிபாய் என்ற ராஜபுத்திரப் பெண்ணைத் தானே திருமணம் செய்து கொண்டார். அவளிடம் அளவற்ற அன்பு செலுத்தியதோடு இந்து தர்மானுஷ்டானங்களை கடைப்பிடிக்க அனுமதித்து ஆக்ரா அரண்மனையில் அவளுக்காக இந்து ஆலயம் ஒன்றையும் கட்டிக் கொடுத்தார். ராஜாமான் சிங் என்ற இந்து அக்பரின் தளபதியாக இருந்தான். தோடர் மால் என்ற மற்ருெரு இந்து அக்பரின் நிதியமைச்சராக இருந்து, பல நிலச் சீர்திருத்தங்களுக்கு வழிகோலி, அக்பரின் ஆட்சியில் அமைதியையும் ஸ்திரத்தையும் ஏற்படுத்தினுன். நிலத்தின் தரத்துக்கேற்றபடி ஜில்லாக்கள் பிரிக்கப்பட்டு வரி நிர்ணயிக்கப்பட்டது. நில வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு அரசாங்கத்துக்கு வரியாகச் செலுத்தப்பட்டது. வரி வசூலிக்க ‘இடை மனிதர்கள்’ இருந்தார்கள். இவர்கள் தவருன வழிகளில் போகாமல் பார்த்துக் கொள்ள மேலதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். இந்த ‘இடை மனிதர்கள்’தான் பிறகாலத்தில் ஜமீன்தார்களாக வட இந்தியாவில் விளங்கினர்.

மதத்துறையில் சமரச நோக்கோடு விளங்கிய அக்பர், இஸ்லாமிய மௌல்விகளையும் இந்துப் பண்டிதர்களையும், ஜைனத் துறவிகளையும், கிறித்தவப் பாதிரிகளையும் ஒருசேர அழைத்து, விஷயங்கள் பற்றி ஆராய்ச்சிகள் நடத்தினுர். சரித்திரப் பேராசிரியனும் தத்துவ ஞானியுமான அபுல்ஃபாசலின் யோசனைப்படி சமரச நோக்குடைய ‘தின் இலாஹி’ என்ற புதிய மதத்தையும் அக்பர் தோற்றுவித்தார். ஆனுல் அக்பர் கண்ட புதிய மதம் அவரோடு அழிந்து போயிற்று. 1605-ம் ஆண்டில், தனது 63-ம் வயதில் அக்பர் காலமானுர்.

மாதவி, மொகலாய சாம்ராஜ்யத்தை இந்தியாவில் நிறுவி, இந்தியாவையே தனது தாயகமாகக் கொண்டு, இந்து முஸ்லிம்களை ஒற்றுமைப் படுத்தி, சமரச உணர்வோடு நீதி தவருமல் ஆட்சி புரிந்த அக்பர் உலக மன்னர்களில்குறிப்பிடத்தக்கவர். ஜே. எம். ஷெலாட் அக்பரின் வாழ்க்கையைச் சுவைபட எழுதியிருக்கிருர். அவசியம் படித்துப் பார்.

அன்புள்ள,

அகத்தியன்.


## வெள்ளிப் பணமல்ல-அது கொள்ளிக்கட்டை!

இந்தி மொழியைக் கற்றுல் உயர்பதவி எளிதில் கிடைக்கும் — என்ற எலும்புத் துண்டை வீசி விட்டு யாராவது எலும்புத் துண்டுக்கு ஆசைப்பட்டு, தாய் மொழி அன்பு எனும் முதுகெலும்பை எடுத்தெறிந்துவிட்டு வருவார்களா என எதிர்பார்த்து; ஏமாந்தது இந்தி ஏகாதிபத்யம்!

இந்தத் தோல்வியால், இந்நாட்டின் ‘கல்லாப் பெட்டி’க்குரிய இந்தி ஏகாதிபத்யவாதிகள் தளர்ந்துபோன மனதைத் தேற்றிக் கொண்டார்கள், தங்கள் பின்னே உள்ள ஆதிக்க பலத்தை ஒரு முறை திரும்பிப் பார்த்துவிட்டு!

ரூ. 50 முதல்ரூ. 300 வரை ரயில்வே ஊழியருக்கான, பல பரிசுகள் இந்தித்தேர்வில் உள்ளன.

ஆண்டொன்றுக்கு இரண்டு முறை நடைபெறும் தேர்வுகளில் மொத்தம் 300 பரிசுகள் உண்டாம்!

—வெள்ளி பணத்தைக் காட்டி ‘உங்கள் தாய் மொழிக்குக் கொள்ளியிட வாரீர்’—என அழைக்கிருர்கள்! ‘பண மூட்டை வேண்டுமென்ருல் உங்கள் தாயின் பிணத்தின்மீது நடந்து வாரீர்’—என அழைக்கிறது இந்தி ஏகாதிபத்யம்!

இரயில்வே ஊழியர்களே! உங்களில் எத்தனை பேர் கொள்ளி ஏந்தப் போகிறீர்கள்? உங்களில் எத்தனை பேர் தாய் மொழியின் பிணத்தின்மீது நடக்கப் போகிறீர்கள்?

## அமைச்சர்கள் சென்றுர்கள், உதகைக்கு !

## நேருவின் மிருகங்கள் சென்றன நைனிடால் !

## ஆனல் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்...

## இப்போது ஆண்டவனுக்கேகூட

## 'குளு, குளு' அறை தேவைப்படுகிறதாம் !

## ஐயோ; ஆண்டவனே, இதுதான் தெய்வீகமா?

# கைலாயத்திலே !...

ஆகா............இதுவல்லவோ கைலாயம்!

பனிமலைமீது பூதகணங்கள் சூழ, பித்தர் பெருமான் அமர்ந்திருந்தார். நான்கு கையிலே ஒரு கை பார்வதி இடையைச் சேர்த்துப் பிடித்திருக்கக் கண்டேன்.

புராணம் சொல்வது ஒவ்வொன்றும் அப்படியே இருந்தது!

பளபளக்கும் பனிமலை!

அதிலே பல படிக்கட்டுகள்.

படிக்கட்டுகளில் பூதகணங்கள் காவல் புரிந்தன.

பூதகணங்கள் ஒவ்வொன்றின் கையிலும் பயங்கர ஆயுதங்கள்; பார்த்தாலே மனது திடுக்கிடக் கூடிய உருவம், பார்வை, எல்லாம்!

சுற்றிலும் ஒவ்வொரு சிறு மலைகளில் 'தவசிரேஷ்டர்'கள் தவம் புரிந்து கொண்டிருந்தனர்!

கமண்டலம், குறுந்தடி, கையிலே ஜபமாலை, ஜடாமுடி எல்லாம் இருந்தன! அவர்களிடம்!

— இவர்களின் நடுவில்தான் சிவபெருமான் அமர்ந்திருந்தார்!

எனக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. அது பலமான சந்தேகம், இவையெல்லாம் சினிமாவுக்கான 'செட்டிங்'குகளோ என எண்ணி

ஆடையும், பூசிய திருநீரும் என்னைச் சிரிக்கத் தூண்டின.

"அடே சிறுவா...ஏன் சிரிக்கிருய்?''—சிவன் கேட்டார்.

"இல்லை.......உங்களைப் பார்த்தால்.......''—என்று இழுத்தேன் நான்!

"...பார்த்தால்?''

"எங்களூர் பைத்தியக்கார பக்கிரிசாமி ஞாபகம் வருகிறது. அப்படியே அச்சுக் குலையாமல் இருக்கிறீர்கள்!''

"சீ! மானிடப் பதரே! வாயை மூடு!''

"முடியாது! பேச்சுரிமையைத் தடை செய்ய உங்களுக்கென்ன அதிகாரம்? எங்கள் நாட்டில் எங்களுக்கென்று விட்டு வைத்த ஒரே உரிமை இது! அதையும் கைலாயத்தில் பறிக்கப்படுவதை அனுமதிக்க மாட்டேன்.''

"அடே சிறுவனே! உனக்கு அகம்பாவம் அதிகம். முதலில் நீ நடந்து கொண்டதே தவறு. என்னைக் கண்டால் முப்பத்து முக்கோடி தேவர்களும் தெண்டனிட்டு வணங்குவார்கள். நீயேன் வாளாயிருக்கிருய்?''என்று சினந்தொனிக்கக் கேட்டார்.

"நீங்கள்தான் என்னை முதலில் கண்டது. ஆகவே என்னை 'வாருங்கள்' என்று வாஞ்சையுடன் கூறியிருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால் உங்க

னேன். என் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள அங்குள்ள பனியைத் தொட்டுப் பார்த்தேன்; 'ஜில்'லென்று இருந்தது. இருந்தாலும் சந்தேகம் தெளியவில்லை.

அங்கு தவம் புரிந்த ஒரு 'தவசிரேஷ்ட'ரின் தாடியை இழுத்துப் பார்த்தால் சந்தேகம் தீர்ந்துவிடும் என்ற நினைப்பில் ஒருவரின் தாடியைப் பிடித்து இழுக்கப் போனேன்.

"டேய், யாரது?''

"பார்த்தால் தெரியவில்லையா?''

"நீ மனிதனு....?''

"பின் என்ன மிருகமா நான்?''

"அதிகப் பிரசங்கி, வா எங்கள் தலைவரிடம்!'' என்று கையைப் பிடித்து 'தரதர'வென இழுத்துச் சென்றது, அந்தப் பூதகணம்!

சிவபெருமான் என்னை ஏற இறங்கப் பார்த்தார்; பின்னர் கண்கள் சிவந்தன; மீசை துடித்தது!

ஆம்....நான் பார்த்த சிவனுக்கு மீசை இருந்தது! அதோடு அவர் பயங்கரத் தோற்றமளித்தார். அவர் திரண்ட புஜங்களும் தீ ஏந்தும் கையும், புலித்தோல்

ளுக்கு வணக்கம் சொல்லியிருப்பேன்!''—என்றேன்.

"ஓகோ...நான் யார் தெரியுமா? முப்புரங்களை எரித்தவன்! காமனைக் கைப்பிடிச் சாம்பலாக்கியவன்; ஊழிக் காலத்தில் ஊர்த்தவ தாண்டவம் ஆடுகிறவன்!...நினைவில் வைத்துக் கொள்; உன்னைவிட உயர்ந்தவன் நான்!''

"இல்லையில்லை தாழ்ந்தவர்!''

"சொல்வது யார்?''

"எங்கள் நாட்டுப் புலவன்!''

'புலவனு? என்ன சொன்னுன், என்னைப் பற்றி?''

"உங்களைக் 'கோழை. பேடி!' என்று கூறுகிருன்!''

"ஆ''—என்ற ஆங்காரக் கூச்சலோடு சூலாயுதத்தைத் தூக்கிக் கொண்டு எழுந்தார் சிவபெருமான்.

"நீலகண்டப் பெருமானே! சாந்தி கொள்க! சாந்தி கொள்க!'' — என்று கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்தாள் பார்வதி.

"நான் பேடி என்பதற்குக் காரணம் கூறினனு, அந்தப் புலவன்?''

"கூறினன், அழுத்தம் திருத்தமாகக் கூறினன்!''

"என்ன அது? உடனே கூறு!''

"அதைச் சொல்லத்தான்போகிறேன்; ஆனல் அதற்கு முன் நான் உட்காருவதற்கு ஒரு நாற்காலி போடச் சொல்லுங்கள்; நின்று கொண்டே இருப்பதால் கால் வலிக்கிறது!''

சிவபெருமானின் கண்கள் செக்கர்வானம்போல் சிவந்தன; சூழ்ந்திருந்த பேய்க் கணங்கள் "மானிடப் பதருக்கு சரிசமமான ஆசனமா?'' — என்று புரட்சிக் குரல் எழுப்பினர்.

அவர்களையெல்லாம் கை ஜாடையால் அடக்கிவிட்டு, எனக்கு ஆசனம் தந்தார் சிவபெருமான், காரணத்தைக் கேட்க வேண்டுமென்ற ஆசையால்!

"ம்...சொல்லு! 'வழவழ'என்று பேசாதே! விஷயத்தை மட்டும் சொல்லு!''

"நீங்கள் வீரன் என்று புராணங்கள் கூறுவதைப் பொய் பேடிகள் என்று எழுதியிருக்கிருன்!''

"ஆ. விஷ்ணுவைக் கூடவா?''

"ஆமாம். அவர்கூட அதற்குப் பயந்து கொண்டுதான், பாற்கடலிலே (தண்ணீரிலே) பாம்புப்பாயை விரித்துப் படுத்துக் கொண்டிருக்கிருர். குளிரைப் போல் தண்ணீரிலும் மூட்டைப் பூச்சி வர முடியாதே! விஷ்ணுவைப் பார்த்துத் தான் எங்கள் ஊரில்கூட சிலர் கட்டில் கால்களுக்குக் கீழே தண்ணீர் வைத்து மூட்டைப்பூச்சிகள் வருவதைத் தடுக்கிருர்கள்!''

"...ம்...பிரம்மா?''

"ஆமாம். அவரும்தான் மூட்டைப் பூச்சிக்குப் பயந்து தாமரைப் பூவிற்குள்ளே போய் ஒளிந்து கொண்டார்!''

"சீச்சீ! இந்தப் புளுகுப் புராணத்தை யார் நம்புவார்கள்? நம் பக்தர்கள் நம்பமாட்டார்கள்!''

"எங்கள் உலகத்துப் பக்தர்கள் மனதார நம்புகிருர்கள். அதன்படி நடக்கிருர்கள்!''

# கலப்படம்

யாக்கிவிட்டான் அந்தப் புலவன். நீங்கள் இந்தக் குளிர் மிகுந்த கைலாயத்திற்கு ஓடி வந்ததற்கு அருமையான காரணம் சொல்கிருன்.''

"என்ன அந்த அருமையான காரணம்?''

"ஒரு சின்ன உயிருக்கு — பூச்சிக்குப் பயந்து கொண்டுதான் நீங்கள் ஓடி வந்தீர்களாம்!''

"எந்தப் பூச்சிக்கு?''

"மூட்டைப் பூச்சிக்கு! ஆம்; மூட்டைப் பூச்சிக்குப் பயந்து கொண்டுதான், மூட்டை பூச்சி வாழ முடியாத இடமாகிய குளிர் பிரதேசத்திற்கு ஓடி வந்துவிட்டீர்களாம்!''

"பொய்........பொய்......சுத்தப் பொய்! என்னை அவமானப் படுத்த வேண்டுமென்றே எழுதின பொய்!''

"ஆத்திரப்படக் கூடாது திரு. இறைவன் அவர்களே! மூட்டைப் பூச்சியின் கடியை உணர்ந்தவர்கள் இதை உண்மை என்று தான் நம்புவார்கள். உங்களை மட்டுமல்ல, முக்கடவுள்களையும்

"என்ன, அதன்படி நடக்கிருர்களா?''

"ஆமாம். உங்கள் கோயில்களில் 'குளு குளு' வசதி (ஏர் கண்டிஷன்) செய்கிருர்கள்.''

"பொய்....பொய்.... பச்சைப் பொய்!''

"யார் பொய் பேசுவது? ஆதாரமில்லாமல் நான் எதையும் பேசமாட்டேன்; இதோ பாருங்கள் தினசரிப் பத்திரிக்கை! 'அகமதாபாத்திலுள்ள ஒரு கோயிலில் 'குளு குளு' வசதி செய்யப் பட்டிருக்கிறது'— இப்போது என்ன சொல்கிறீர்கள்''—என்றேன்.

"நம்ப முடியாத சேதி; கொண்டாருங்கள், நான் பார்க்கிறேன்.'' என்று என் கையிலிருந்த பத்திரிக்கையைப் பிடுங்கினர். பிடுங்கும் வேகத்தில், அரை அங்குலத்திற்கு வளர்ந்திருந்த அவருடைய நகம் என் கையைக் கீறிவிட்டது; ரத்தம் 'குபுகுபு' என வந்தது.

'ஆ' என அலறிக்கொண்டே எழுந்தேன். அடடா! நடந்தவை யாவும் கனவு !!

# தி. மு. க.

## தலைமைச் செயற்குழு-

## பொதுக்குழுக் கூட்டங்கள்

★

தி. மு. கழகத் தலைமைச் செயற்குழு — பொதுக் குழுக் கூட்டங்கள் ஜூலைத் திங்கள் 11, 12 (சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் மாயூரத்தில் கூடுகின்றன.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

# சுழல் விளக்கு

மாலுமி

டி. எஸ். பாபுசாமி;
திருவல்லிக்கேணி.

(?) 'அடுக்கு மொழிக்காக வடக்கு-வள்ளி, தெற்கு-தெய்வயானை என்று மு. கருணாநிதி குறிப்பிட்டார். தெய்வயானை வடக்கில் பிறந்தவள் என்பதைத் தெரியாமல்,பேசுகிருரே'—என்று நிதியமைச்சர் கூறியிருக்கிருராமே?

நிதியமைச்சர் தவருகப் புரிந்து கொண்டு பேசியிருக்கிருர்! "புராணத்தில் வரும் சுப்பிரமணியரைப் போல நம் நிதியமைச்சர் சுப்பிரமணியனுருக்கும் தெற்கு எனும் தெய்வயானை இருக்கும்போது வடக்கு எனும் வள்ளி தேவையா ?"—என்றுதான் கேள்வி எழுப்பப்பட்டது. 'தெற்கில் பிறந்த தெய்வ யானை இருக்கும் போதுவடக்கில் பிறந்த வள்ளி எதற்கு?'—என்று கேட்கப்படவில்லை! தனக்கென ஒருத்தி இருக்கும்போது மற்றொருத்தி எதற்கு; தனக்கென ஒரு நாடு இருக்கும்போது மற்றொரு நாடு எதற்கு—என்ற பொருளில் அக்கேள்விக்கணை எழுந்தது. ஆனல் இதைப்புரியாமல் அவர் பேசிய பேச்சு சுப்பிரமணியனரின் 'ஆழ்ந்த தமிழறி'வையும், 'உபமான, உபமேய ஞானத்தையும்' உள்ளங்கை நெல்லிக்கனியெனக் காட்டுகிறது.

கே. பி. எஸ். பாலசுப்பிரமணியம்;
கானுடுகாத்தான்.

(?) "வாலிபர்கள் எல்லாம் இப்போது தி. மு. க. தான்! திருமணம் முடிந்தவுடன் காங்கிரசில் சேர்ந்து விடுவார்கள்!"—என்று ஒரு காங்கிரஸ் தலைவர் பேசியிருக்கிருரே?

இதை நம்புகிறீர்களா? இதுதான் உண்மை என்ருல், வாலிபர்கள் எல்லோருக்குமே திருமணம் செய்து வைக்கும் பணியை காங்கிரஸ் கட்சியே ஏற்றுக்கொண்டுவிடுமே!

கே. அருணகிரி; சேலம்—1.

(?) கேரளத்திற்குச் சென்ருரே நேரு; கலவரம் என்ன ஆயிற்று?

பிரபல சோஷலிசவாதி—அகில உலக சமாதானப் புரு—வகுப்புவாதத்திற்குப் 'பச்சை விளக்கு' காட்டி விட்டார், அங்கே! வளர்த்த கடாவே மார்பில் பாய்வதைப்போல, 'கடவுளுக்கே அஞ்சாத' இந்த தைரியநாதரின் சமரச முயற்சிகளைத் தூக்கி எறிந்து விட்டார்கள், மதவெறி தலைக்கேறிய கிளர்ச்சிக்காரர்கள்! கடைசியில் ஜனநாயகத்திற்கு எதிராக மறு தேர்தல் நடத்தும்படி சந்தர்ப்பவாத யோசனையைச் சொல்லிவிட்டுப் பறந்து விட்டார்!

முத்துரத்தினம்; திருவாரூர்.

(?) தி. மு. க.—வைசொற்போருக்கு அழைத்திருக்கிருரே ஒரு அமைச்சர்....?

பாவம், அவருக்கு நம்முடன் சொற்போரிட்டுப் புறமுதுகு காட்டியோர் பட்டியல் தெரியாது. இனிக்கப் பேசும் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் 'அண்ணவுடன் இனி நமக்கு ஆகாது போர்'—என்று கூறி ஓடிவிட்ட சேதியும், பசுமலை நாவலர் ஒருவர் சொற்போரில் புலியெனப் பாய்ந்து, போருக்குப் பிறகு பசுவென வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடிய சேதியும் இந்தப் 'புதுப் பேச்சாளர்' அறியமாட்டார். இப்படிப் பெரியவர்களே கூட எதிர்த்துப் பார்த்து, தோல்வியைத் துணைக்கழைத்துக் கொண்டார்கள்! பதவியேற்பதற்கு முன்பு இருள் படிந்து கிடந்த இவருடைய பேனவும், நாவும் இப்போது நம்மை எதிர்க்க வருகிறது! வரட்டும்! வரட்டும்! தேர்ல்வியும், துடைக்க முடியாத அவமானமும் அவருக்கெனக் காத்துக் கிடக்கிறது!

பி. மாணிக்கம்; கருவலூர்.

(?) காமராசர் பாரத நாட்டின் பிரதமரானல்......?

அவர் தெற்கே பிறந்தவர் என்பதை மறந்துவிட்டீர்களா?

கோ. கோதண்டபாணி;
மதுரை.

(?) 'தெற்கே அணைகட்ட வேண்டுமானல், அண்ணதுரையின் வாய்க்குத்தான் அணை கட்ட வேண்டும்' என்று ஒரு 'அரசியல் தலைவர்' கூறினராமே அது எதைக் காட்டுகிறது?

பாய்ந்து வரும் (தமிழ்க்) கடலுக்கு அணை கட்டுவேன்' எனக் கூறுவோரின் ஞானசூன்யத்தைக் காட்டுகிறது; மருந்து போட முடியாத 'குதர்க்க வாதம்' பிடித்தவரின் பிதற்றலைக் காட்டுகிறது; எழுப்பும் கேள்விகளுக்குப் பதில் தர முடியாது, வழி தவறிப் பேசிடுவோரின் வாய்க் கொழுப்பைக் காட்டுகிறது!

மோகன்ராம்; முக்கூடல்.

(?) காங்கிரஸ் மாநாடுகளில் இப்போது நூல் நூற்பது உண்டா?

காந்தியாரின் கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைத்து விட்டவர்கள்; புகைப்பட நிபுணர்களைக் கண்டால் மட்டுமேதான் மாநாடுகளில் நூற்கிருர்களாம்; ஆனல் ராஜ கட்டத்தில் காந்தியாரின் சவக் குழிக்கு அருகில் இப்போது ஆண்டுக்கு ஒரு முறை வெகு சிரமப்பட்டு ஐந்து நிமிடங்கள் நூற்கிருர்களாம்!

கே. பி. பாலன்; தேனி.

(?) தமிழ்த் தினசரிகளில் பெரும்பாலானவை 'சுதந்திரக் கட்சி'யை ஆதரிக்கின்றனவே; ஏன்?

காமராசரைக் கவிழ்க்க சரியான காலத்தை எதிர்நோக்கிக் கிடந்த பத்திரிகை உலக 'பூர்ஷ்வா'க்களுக்கு இதை விட்டால் வேறுசமயம் கிடைக்குமா?




சென்ற 22—6—59—அன்று முத்துப்பேட்டையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்ட மேடையின் தோற்றம் இது. தோழர் ந. தருமலிங்கம் தலைமையில் தோழர்கள் மு. கருணாநிதி, என். எஸ். இளங்கோ—ஆகியோர் பேசினர்கள்.

(புகைப்படம்: ஜி. சீனிவாசன்)

## இளைஞர் கழகம், திருவாரூர்.

2-வது முத்தமிழ் விழா.

★

(இயல்) 3-7-59 வெள்ளி மாலை 5 மணி

தலைவர்: திரு. ஞா. தேவநேயப்பாவாணர் எம். ஏ.
தலைமையுரை—"தமிழின் பதினறு தன்மைகள்"

திறப்பாளர்: நாஞ்சில் கி. மனோகரன் எம். ஏ.

சொற்பொழிவு:
பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ., எம். எல். ஏ.
பொருள்: "தமிழ் அறம்"

(இசை) 4-7-59 சனி மாலை 6 மணி

தலைவர்: குன்றக்குடி அடிகளார்
தலைமையுரை; "தமிழிசை"
—விபுலானந்த அடிகள் திருவுருவப் படத் திறப்பு
இசையாசிரியர் ப. சுந்தரேசன் குழுவினர், இன்னிசை.

(நாடகம்) 5—7—59 ஞாயிறு இரவு 9 மணி

திரு. டி. கே. சீனிவாசன் அவர்கள் தலைமையில்
இளைஞர் கழக உறுப்பினர்கள் பங்கேற்று நடிக்கும்
திரு. பி. சி. கணேசன் எழுதிய
★ திருவாளர் பிரபலம் ★
எனும் நாடக அரங்கேற்றம்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி; 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு